

Q4:33
N57
109926

# மகாத்மா புத்தர்

# மகாத்மா புத்தர்

தோ. ந. வீரராகவன்

இமயப் பதிப்பகம்
நாகப்பட்டினம்.

முதற்பதிப்பு: ஜூலை 1957

ரூபாய் ஒன்றரை

எவரெடி அச்சகம், சென்னை-17.

# முன்னுரை

சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு என்று நினைக்கிறேன்; கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்களின் கவிதை ஒன்று தீபாவளி சிறப்புமலரில் வெளிவந்திருந்தது. அழகான அன்னப் பறவை ஒன்று தேவதத்தனுடைய அம்புக்கு இலக்காகி இறகொடிந்து பறக்க வலுவற்று பக்கத்தே இருந்த பசுஞ் சோலையில் விழுந்து துடி துடித்தது. அதை இளஞ்சித்தார்த்தர் கண்டார். துடிக்கும் பறவையைத் தூக்கி எடுத்து அதன் பதை பதைப்பைக்கண்டு அவர் திகைத்தார். அந்த மெல்லிய அன்னப் பறவையின் உடலிலே தைத்திருந்த அம்பின் வழியே இரத்தம் பெருகி ஒழுகுவதைத் தடுக்க அதன் உடலிலே தைத்திருந்த அம்பை எடுத்தார். எடுத்தவர், அதன் கூர்மையான நுனியை தனது கையின்மேல் மெல்லக் குத்திப்பார்த்தார். ஒரே வலி. "ஆ" என்று அலறினர். அவருக்கு அப்போதுதான் புரிந்தது உடலின் வேதனை. அந்த ஒரு காட்சியைக் கவிமணியவர்கள் மிக அழகாக எழுதி இருந்தார்கள். இதை நான் பல முறை படித்தேன். படிக்கப்படிக்க என் உள்ளத்தே இனம்புரியாத ஒருவித உணர்வு பிறந்தது. அவருடைய கவிதையின் அழகு என் நெஞ்சிலே ஊறி இன்றளவும் அப்படியே மங்காமல் மறையாமல் நின்று நிலவுகிறது. அதன் விளைவிலேதான் மகாத்மா புத்தர் பிறந்தார்.

நல்லொழுக்கமும் நல்லறிவும் உடையவராகத் தீமைகளை நீக்கி அன்புடனும் அக்கரையுடனும் வாழப் புத்தரின் வாழ்வில் எவ்வளவோ நிகழ்ச்சிகள் உள்ளன. அவைகளில் சாதாரண உலக வாழ்க்கைக்கு பொருந்தும்படியான ஒரு சில நிகழ்ச்சிகளை மட்டும் எடுத்துக்கொண்டு இளைஞர்களின் நல்வாழ்வுக்குப் பயன்படும்படியாக நான் இந்நூலை எழுதியுள்ளேன்.

இந்நூலின் அழகை உயர்வு படுத்தும் ஓவியர் மணியம் அவர்கள் பேராசிரியர் கல்கி அவர்களுடன் அஜந்தாவின் அழகோவியங்களைக் கண்டு பல உயிர்ச்சித்திரங்களைத் தீட்டியவர். இலங்கையில் உள்ள பௌத்த ஆலயங்களிலும் புத்தரின் திருஉருவங்களைக் கண்டு பல ஓவியங்களை வரைந்தவர். அவரின் கை வண்ணத்தில் பிறந்த அருமையான உயிர் ஓவியத்தை அட்டைப் படமாகத் தாங்கி வரும் இந்நூல் மேலும் சிறப்படைகிறது. அவருக்கு என் நன்றி என்றும் உரியது.

இந்த நூலைத் தமிழ் பெருமக்கள் பெரிதும் விரும்பி வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

இமயப் பதிப்பகம்,
நாகப்பட்டினம்

தோ. ந. வீரராகவன்

# பொருளடக்கம்


| | |
|---|---|
| புவனம் போற்றும் மனிதன் பிறந்தான் | 9 |
| கருணை உள்ளம் | 18 |
| கண்கள் கலந்தன | 23 |
| வாழ்வின் உண்மையைக் கண்டேன் | 29 |
| துன்பம் ஒழிப்பேன் | 34 |
| தளிரும் சருகும் | 41 |
| கலத்திலே கறந்துதா | 46 |
| உயிர்க்கொலை வேண்டாம் | 49 |
| சுஜாதை அளித்த அமுது | 54 |
| மெய்ப்பொருள் கண்ட மகாத்மா | 64 |
| சத்தியமே வெற்றி | 72 |
| 2500 ஆண்டுகளில் | 79 |

★

உலகின் பல பாகங்களில் மகாத்மா புத்தரை நினைவுறுத்தும் நினைவுச் சின்னங்கள் சிலவற்றை இந்த இரு பக்கங்களிலும் காணலாம்.

★




ஜாவா
தாய்லாந்து
ஜப்பான்
சீனா
பர்மா
இலங்கை

# மகாத்மா புத்தர்

——: :——

## புவனம் போற்றும் புனிதன் பிறந்தான்

இமயத்தில் தன் ஒளியால் பொன் ஒளியாகி வெள்ளிப் பனி உருகிப்பெருகிவரும் பேரழகை உதயசூரியன் கண்டு களிப்புற்றான். அவனுடைய புன் சிரிப்பு மலைமகளின் மேனியைத் தீண்டிக் கூச்சப்படுத்தியதால் அந்தப் பனியாம் குமரி மெல்ல நழுவி நாணத்தோடு நகர்ந்து சென்றாள். இப்படி மலைகளிலிருந்து எண்ணற்ற சிற்றருவிகள் பெருகி **கபிலவாஸ்து** நகரைச்சூழ்ந்து ஓடிவந்தன. கிழக்கே **ரோகிணி**நதி பகல் முழுவதும் ஓடி விளையாடிவிட்டுத் தூங்கும் இளங்குழந்தையைப்போல அமைதியாக உறங்கிக்கொண்டிருந்தது.

கபிலவாஸ்து கோசல நாட்டுத் தலைநகரான அயோத்திமா நகருக்கு வட கிழக்கே உள்ளது. அதை **சுத்தோதனன்**

என்ற **சாக்கியகுல** மன்னன் ஆண்டுவந்தான். அவனுடைய காலம் இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முந்தியது.

இயற்கை எழிலும், குன்றுத பொருள்வளமும் பொருந்திய அக்குறுநிலத்தை நீதிவழுவா நெறிமுறையில் ஆட்சி செய்து வந்தான்.

அவனுக்கு நான்கு சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் இருந்தனர்.

**சாகப்பெருமரங்கள்** அடர்ந்துள்ள இடத்தில் அவனுடைய முன்னோர்கள் இருந்ததால் சாக்கியரென்றும், கோதமரென்பவரது மரபில் உதித்ததால் கௌதமரென்றும் அழைக்கப்படுவர்.

சுத்தோதனன், கோலிய நாட்டு மன்னன் அஞ்சனனுடைய மகளிரான **மகா மாயா**வையும் **கௌதமி**யையும் மணஞ்செய்து கொண்டான்.

இவ்விருவருள் மாயாதேவி பேரழகுடையவள். நல்ல குணமும் பண்பும் நிறைந்தவள். நாட்டு மக்கள் அனைவரும் அவளை அன்னையாக மதித்து வணங்கிவந்தனர்.

சுத்தோதனன் அவள் அழகிலும் அன்பிலும் மூழ்கித் தன்னை மறந்திருந்தான்.

மன்னன் மாயாவிடத்துமட்டும் மிக்க வேட்கையுற்று இருப்பதை அறிந்த கௌதமி மாயாதேயின்பால் அழுக்காறுற்று மனங் கொதித்துக்கொண்டே காலங்கழித்து வந்தாள். இவ்விருவரும் நெடுங்காலமாக மகப்பேறு இன்றி வாழ்ந்து வந்தார்கள்.

மன்னனுக்கும் மக்கள் இல்லையே என்ற கவலையைத் தவிர வேறு ஒரு கவலையும் இல்லை. நல்ல நாடு இருந்

தும், நல்ல குடிமக்கள் இருந்தும் நல்ல அரசு இருந்தும் அதைத் தனக்குப் பிறகு ஆள ஒரு மைந்தன் இல்லையே என்று ஏங்கினன்.

இப்படிக் காலம் கவலையால் கழிந்தபோது ஒரு மகிழ்ச்சிச் செய்தி எல்லோர் காதிலும் தேன் எனப் பாய்ந்து இனித்தது.

ஆம், மாயாதேவி தன் நாற்பத்தைந்தாவது வயதில் கருவுற்ருள்.

மன்னன் மட்டற்ற மகிழ்ச்சியால் உள்ளம் பூரித்துக் கிடந்தான். மாயா தேவியை இழுத்துத் தன் அருகில் அணைத்துக் கொண்டு "என் அன்பே! ஆருயிரே! இன்பமே! வரண்ட என் வாழ்வை வள மாக்கிய பூஞ்சோலையே! கரும்பே! தேனே! கற்கண்டே": என்று மனமகிழ்வில் வந்த வார்த்தைகளையெல்லாம் கூறி அவளைப் போற்றினன். மாயா தேவியின் முகம் வெட்கத்தால் கனிந்து சிவந்தது. கருவுற்றிருந்ததால் அவள் உடலெங்கும் வனப்பு பரவிக் கவர்ச்சி நிறைந்திருந்தது.

ஆட்சி அலுவல்களைக் கவனித்த நேரம்போக, மற்ற வேளைகளில் மாயாவின் அந்தப்புரத்தில்தான் சுத்தோதனன் தங்குவான்.

கரு வளர வளர அவனுக்கு அவளிடம் பரிவும் கவலையும் வளர்ந்துகொண்டே வந்தது.

மாயாதேவிக்குப் பிறக்கும் குழந்தை ஆணுக இருக்கவேண்டும்; அப்படி இருந்தால்தானே அரசுக்கு நல்லது. தேவி எந்தவிதச் சிரமமும் இல்லாமல் நல்லவிதமாகக் குழந்தையைப் பெற்றுப் பிழைக்கவேண்டும். இதுவே அவனுக்குப் பெருங் கவலையாக இருந்தது.

ஒருநாள் மாயா, சுத்தோதனனிடம் தான் தாய் வீட்டுக்குச் செல்ல இருக்கும் யோசனையை வெளியிட்டாள். இதைக்கேட்ட மன்னன் அயர்ந்து விட்டான்.

'மாயாவைவிட்டு தான் எப்படித் தனியாக வாழ்வது? நிறை மாதத்தில் தாய் வீட்டுக்கு அனுப்பிவிட்டு ஒவ்வொரு நாளும் முள்ளில் கிடப்பதுபோல் தானே வேதனையுடன் நாட்களைப் போக்கவேண்டும்! ஒவ்வொரு விநாடியும் மாயா தேவியின் உடல் நிலை எப்படி இருக்கிறது? எப்போது பிள்ளையும் கையுமாக என்னிடம் வருவாள்? என்ற ஏக்கத்தில்தானே நான் ஏங்கி இருக்கவேண்டும்? நான் கைப்பிடித்த நாளிலிருந்து என்னைவிட்டு நீங்காமல் என் நிழல் போல் என்னுடனே ஒட்டி உறையும் மாயாதேவி இந்த நேரத்தில் தாயகம்போகவேண்டுமென்கிருளே...' என்ற சிந்தனையில் மூழ்கிவிட்டான் மன்னன் சுத்தோதனன்.

மாயா தேவி தன் மலரினும் மெல்லிய கைகளால் அவனுடைய தோளைப்பற்றி "நாதா, ஏன் அப்படித் தயங்கி விட்டீர்கள்! ஏதோ ஆசைப்பட்டேன். இது பெண்களுக்கே இயல்பாக உள்ள ஒரு ஆசை. இதனுல் தங்களிடம் உள்ள அன்பு குறைந்ததாகக் கருதவேண்டாம். தங்களுக்கு விருப்பமில்லாவிட்டால் நான் போகவில்லை. அதற்காகத் தாங்கள் கவலைப்படவேண்டாம்" என்று அன்பு பொங்கக் கூறினுள் மாயா.

மாயாதேவியின்முகத்தை நிமிர்ந்துபார்த்தான்மன்னன். களங்கமில்லா நிலவுபோல துல்லியமாய் விளங்கும் அவள் முகத்தைக் கண்ட மன்னனுக்கு அவள் ஆசையைத் தடுக்க மனம் ஒப்பவில்லை. தன் வேதனையை ஒருபக்கம் ஒதுக்கி விட்டு "மாயா உன் விருப்பப்படியே பிறந்தகத்துக்குப் போய்வா. நீ எப்போதும் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டு

மென்பதே என் ஆசை! ஆனால் உன்னை விட்டுப் பிரியத் தான் எனக்கு மனம் வரவில்லை'' என்றான்.

மாயா தேவி சிரித்துக்கொண்டே "இதற்கெல்லாம் கூட என்னைவிட்டு உங்களால் பிரிந்திருக்க முடியவில் லையே!'' என்று பெருமிதத்துடன் கேலியாகக் கூறிவிட்டுத் தன் கணவனின் அன்பை வியந்து நெஞ்சுக்குள் அவனைத் துதித்து மகிழ்ந்தாள்.

* * *

மறுநாள் காலை மாயாதேவி பக்கத்தே உள்ள **தேவதக** நகரத்திலிருந்த தன் தாய் வீட்டிற்குப் புறப்பட்டாள். மன் னன், மாயா தேவியின் பயணத்தை ஒட்டி வழி நெடுக அலங் கார அழகுகள் செய்து, பாதையெங்கும் புழுதி எழாதபடி நீர் தெளித்துச் சுத்தமாக வைத்திருக்கச் செய்தான்.

அற்புதமான சித்திர வேலைப்பாட்டுடன் கூடிய தந்தப் பல்லக்கில், மாயாதேவி பணிப்பெண்கள் புடைசூழத் தன் தந்தையின் நகருக்குப் புறப்பட்டாள்.

பல்லக்கு தன் பார்வையைவிட்டு மறையும்வரை மன் னன் சுத்தோதனன் அப்படியே சிலையாக நின்றிருந்தான்.

பல்லக்கில் சென்ற மாயா தேவி வழி நெடுகத் தன்னைக் கண்டு களிக்கும் நகரமாந்தரின் இனிய முகங்களையும் ஆர வார வாழ்த்தொலிகளையும் ஏற்றுக்கொண்டு பல்லக்கில் போய்க்கொண்டிருந்தாள்.

மாயா செல்லும் வழியில் **உலும்பி**னி வனம் என்ற அழகு மிக்க தோட்டம் ஒன்று உண்டு. அது மாயா தேவி, தன் மண வாழ்வை மன்னன் சுத்தோதனனுடன் கழித்து மகிழ்ந்திருந்த இன்பமான இடம். அந்தப் பூஞ்சோலை மிக்க

எழிலுடையது. கண்டார் வியக்கும் வண்ணம் எண்ணற்ற வண்ணங்கள் நிறைந்த அழகு மலர்கள் பூத்துக்குலுங்கும் செடிகொடிகளும், இயற்கை நீர் ஊற்றுகளும், அழகிய மாளிகைகளும் நிரம்பியது. தோகை மயிலும்; புள்ளி மானும், கொஞ்சும் கிளியும், குலவும் புருவும் கண்களுக்கு இன்பம் பயப்பன. பல்லக்கில் சென்று கொண்டிருந்த மாயா வின் உள்ளத்தில் அந்த எழில் மிக்க நந்தவனத்தில் சற்று இறங்கி இளைப்பாறலாம் என்ற எண்ணம் தோன்றியது.

பணிப்பெண்களுடன் பல்லக்கிலிருந்து கீழே இறங்கி சோலை நடுவே சற்று உலாவிவரப் புறப்பட்டாள். தோழிப் பெண்களுடன் மகிழ்ந்து இன்புற்றுவரும் வேளையில் அருகே நின்ற **அசோக** மரமொன்றைக் கண்ணுற்றாள். அதில் மலர்கள் பூத்துக்குலுங்கின. ஒரு கிளையெங்கும் பூச் சரம்போல் மலர்கள் நிறைந்து கைக்கு எட்டும் உயரத்தில் வளைந்து நின்றன. மாயா அம்மலர்களைக் கொய்ய எண்ணி அம்மரத்தின் கிளை ஒன்றைப் பற்றுவதற்காகக் காலை ஊன்றி வலக்கையை மேலே தூக்கி மலர்க் கொம்பைப் பற்றினாள். அவளுக்கு அப்போது நிறைமாதம். கருவுயிர்க்கும் காலத் தின் நேரமும் அதுதான். அதனால் அவ்வேளையில் அவள் ஓர் அழகிய ஆண்மகவொன்றை ஈன்றெடுத்தாள். இந்த மங்கலச் செய்தி மன்னருக்கு அறிவிக்கப்பட்டது.

புவனம் வாழ புனிதன் பிறந்தான் என்ற செய்திகேட்டு மன்னன் விரைந்து வந்தான்.

தன் வாழ்வில் பெற்ற பெரும்பேற்றை எண்ணிப் பெரு மகிழ்வெய்தி குழந்தையையும் மாயாவையும் அழைத்துக் கொண்டு கபிலவாஸ்து வந்தடைந்தான்.

வைகாசி மாதம் பூர்ணிமையும் விசாக நட்சத்திரமும் கூடிய வெள்ளிக்கிழமையில் சந்திரபிம்பம் போன்ற எழில்

வதனத்துடன், பொன்னிற மேனிபடைத்த குமாரன் பிறந்திருக்கிறன் என்ற செய்தியைக் குவலயம் அறிந்தது. மக்கள் குதூகலமுற்றுக் குழந்தையைக் கண்டு இன்புற கபில வாஸ்துவுக்கு வந்தவண்ணமாகவே இருந்தனர்.

செல்வக் குழவியைக் கண்டு மகிழ்ந்திட ஆயிரம் ஆயிரம்பேர் வந்து கூடினர். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் திறமைக்கேற்பப் பரிசுப் பொருளேப் பலவகையாகக் கொண்டுவந்து குவித்தனர். முத்தும் பவழமும், பட்டும் பீதாம்பரமும் அரண்மனே எங்கும் நிறைந்து கிடந்தன.

வந்தவர் யாவரும் குழந்தையை எடுத்து உச்சி மோந்து உள்ளங்களித்தனர். சிந்தைக்கினிய திருமகனுக்கு **சித்தார்த்தன்** எனப் பெயரிட்டனர்.

மன்னன் திருமகனேக்கான பற்பல நாட்டு மக்களும் வந்தனர். அப்போது இமயமலேச் சாரலில் **அசிதமுனிவர்** என்ற ஒரு தவயோகி இருந்தார். அவருடைய செவியிலும் இந்த நல்ல செய்தி விழுந்தது. அவர் பழுத்த தவயோகி. மகிழ்ச்சியுற்று ஆவலுடன் சுத்தோதனனின் அரண்மனேக்கு வந்தார். முனிவரின் வரவைக்கண்டு அரசன் தன் அருமை மனேவி மாயாதேவியை அழைத்து குழந்தையை எடுத்துவரச் சொன்னன். அவளும் கணவன் சொற்படி குழந்தையை எடுத்து வந்தாள். முனிவர் சிறு மதலேயைப் பார்த்துப் பரவசமாகித் திருவும் ஒளியும் நிறைந்த அதன் முகத்தைக் கண்டு "மன்னர் மன்னவா கிடைத்தற்கரிய ஞான விளக்கினே நீ பெற்ருய். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கப்பால் ஒரு முறை மலரும் மலர் இது. மன்னுயிர் எல்லாம் இன்பம் அடைந்திட ஒரு மகவினேப் பெற்று உலகினுக்கீந்த உன் சிறப்புக்கு எல்லே ஏது? உலகம் போற்றும் உத்தமஞக இந்தக் குழந்தை விளங்கப்போகிருன். ஆனல் அரசே..." என்று தயங்கினர் அசிதமுனிவர்.

மன்னவன் தவித்தான். "என்ன முனிவரே! என்ன சொல்லுங்கள்! தயக்கம் ஏன்?" என்ருன்.

அசிதமுனிவரின் கண்களிலிருந்து தாரை தாரையாய் நீர்வடிந்தது. "அரசே நான் பல ஆண்டுகள் இமயத்தின் சாரலில் சத்தியத்தின் நித்தியத்தை காணவேண்டுமென்று தவம் செய்து வந்தேன். ஆண்டுகள் பல கழிந்துவிட்டன. முதுமை என்னை ஆட்கொண்டு விட்டது. எனக்கு இப்போது வயது எண்பதுக்குமேல் ஆகிவிட்டது. உன்மைந்தனை பார்த்ததிலிருந்து உலகம் முழுவதும் அறிவொளி பரப்பி அறவுரை போதிக்கும் மகாத்மாவின் நல்லுரைகளைக் கேட்டுப் பிறவாப்பேரின்பம் அடைய முடியாமல் போய் விட்டதே என்று எண்ணித்தான் வருந்துகிறேன்" என்று கூறி அசிதமுனிவர் கண்ணீர்விட்டார்.

"சுவாமி இந்த அற்புதமான குழந்தை புவிஆளும் என்று சொல்கிருர்களே அது உண்மையா?" என்ருன்

"ஆம்...மன்ன உலகத்தின் துன்பத்தைப் போக்க இவன் அரச வாழ்வையே நீத்துத் துறவு கொள்வான். அவன் பெயரும் புகழும் புவி ஆளும் சிறப்புடையது ஆனல் இன்னும்சில நாட்களில் மங்கையர்க்கரசி மாயா தேவியின் வாழ்க்கையும் துன்பமாய் முடியும்" என்று சொல்லி அசிதமுனிவர் அரண்மனையைவிட்டு வெளியே வந்தார்.

மன்னன் மயங்கினன்; நிலை தடுமாறினன். "நான் பெற்ற செல்வத்தால் என் குடும்பவிளக்கு அணைந்து விடுமா? இது என்ன அநீதி! அரசை ஆள அருமைப் புதல்வன் பிறந்தான் என்ற களிப்பில் மூழ்கினேன்; அவன் எல்லாவற்றையும் துறந்து ஞானியாவான் என்கிருர் அசித முனிவர். ஐயோ...இது என்ன விபரீதம்! என் நெஞ்சை

வாள் கொண்டு அறுக்கிறதே! இந்தத் துயரத்திலிருந்து மீள எனக்கு வழி இல்லையா?" என்று சொல்லி மன்னன் மயங்கிக் கீழே விழுந்தான்.

அருகிலிருந்த அமைச்சர் தலைவர் அரசனுக்கு வேண்டிய ஆறுதல் மொழிகளைக் கூறி மன்னனைத் தேற்றினார். "குழந்தை பிறந்துள்ள நேரத்தில் ஏன் இந்தக்கவலை? செல்வனுக்குத்தான் நீண்ட ஆயுளும் சிறப்பு மிக்க வாழ்வும் உண்டு என்று சொல்கிறார்களே! அவனுக்கு வயது வந்து வாலிபனாகி இவ்வுலகைப் பார்க்கும்போது அவனுடைய கண்ணில் துன்பத்தின் நிழல் கொஞ்சங்கூட விழாதபடி செய்துவிடுவோம். அரசே நாங்கள் இருக்கும்போது நீங்கள் இப்படி கவலைகொள்வது சரியல்ல. எழுந்திருங்கள்" என்று கூறி அமைச்சர் மன்னனை மைந்தனிடம் அழைத்துச் சென்றார்.

# கருணை உள்ளம்

அரண்மனைக்கு அருகே ஒரு அழகிய பூஞ்சோலை. எங்கும் மலர்கள் மலர்ந்து மணங்கமழ்கின்றன. சித்தார்த்தர் சிந்தனை நிறைந்த முகத்துடன் உலாவிக்கொண்டே இருக்கிறார். நல்ல வாலிபப் பருவம். வயதுக்கேற்ற அழகும் கம்பீரமும் நிறைந்த தோற்றம். ஆனால் இளமைக்கேற்ற மிடுக்கும் துடிப்பும் இல்லை. அமைதியும் அழகும் நிறைந்த வதனம். எதைப்பற்றியாவது எண்ணிக்கொண்டிருந்தால் முகத்திலே சிந்தனையின் ரேகைகள் படியும்; சிந்தனைக்குத் தெளிவு பிறந்துவிட்டால் முகத்திலே ஒரு மென் சிரிப்பு தவழும்.

வடதிசையில் வளர்ந்து நின்ற இமயம் மாலைக் கதிரோனின் ஒளியால் பொன்மயமாய் பளபளத்தது. அவ் வேளையில் அன்னப் பறவைகள் தன் வாழிடம்நோக்கி வானிலே பறந்து சென்றன.

தேவதத்தன் என்ற ஓர் அரசிளங்குமரன் பறந்து செல்லும் அன்னப் பறவைகளைப் பார்த்து வில்லினை வளைத்து ஓர் அம்பினை விட்டான்.

முதன் முதலாகச் சென்ற அன்னப்பறவையின் அகன்ற சிறகினில் அவன் விட்ட அம்புதைத்தது. அது பதைபதைத்தது. மெல்ல மெல்லப் பறந்து தன் குஞ்சுகளின் இருப்பிடம் நோக்கிச் செல்லத் துடித்தது. முடியவில்லை. சிறகினில்

தைத்த கூரிய அம்பின் பளு அழுத்தியது. ஊற்றிலிருந்து நீர் பெருகி வழிவதுபோல இரத்தம் வழிந்தது. அன்னப் பறவை தன் சக்தியை இழந்து தளர்ந்து சித்தார்த்தரின் பூஞ்சோலையில் வந்து விழுந்தது. வேதனை தாங்காமல் சிறகுகளைப் 'படபட' என்று அடித்துக்கொண்டது.

அப்போது அவ்வழியே வந்த சித்தார்த்தர் வீழ்ந்து கிடக்கும் அன்னப் பறவையைப் பார்த்தார். மேனி முழுவதும் ஒழுகி ஓடும் உதிரத்தோடு துள்ளித் துள்ளித் துடிப்பதைக் கண்டு சிந்தைகனிந்து தன் தளிர்போன்ற கரங்களால் தாங்கி எடுத்து மார்போடு அணைத்தார். மெதுவாக தடவிக் கொடுத்தார்.

"இது என்ன கொடுமை! சிவந்த கால்களும். அழகிய மூக்கும், பஞ்சுபோன்ற வெண்மையான மெல்லிய இறகும் படைத்த இந்த அன்னப்பறவையை அம்புகொண்டு வதைத்ததுயார்? எவ்வளவு இரத்தம்!" என்று கூறிக்கொண்டே இடக்கையால் அன்னப் பறவையைத் தாங்கிக்கொண்டு, அம்பினை வலக்கையில் எடுத்து இரத்தத்தைத் துடைத்து அடிபட்ட புண்ணில் பச்சிலையை வைத்துக் கட்டினர்.

அவர் இது நாள் வரையிலும் இரத்தத்தைக் கண்ணால் பார்த்ததில்லை. நோய் நொடியின் கொடுமையையும் அதனால் ஏற்படும் உடலின் வேதனையையும் அறிந்தவரில்லை.

ஆகையினால் அன்னப் பறவையின் மீது பாய்ந்த அம்பின் முனையைத் தனது முழங்கையில் வைத்து அழுத்திப் பார்த்தார். "ஐயோ...என்னவலி இது! உடலெங்கும் ஊடுருவிப் பாய்கிறதே! அன்னப் பறவையின் மெல்லிய உடம்பில் இந்த அம்பு தைத்து எவ்வளவு வேதனையை உண்டாக்கி இருக்கும்" என்று வருந்தி அதைத் தாயினும் சாலப்பரிந்து தன் மார்புடன் தழுவிக்கொண்டார்.

சிறிது நேரம் சென்றது. ஒரு சேவகன் வந்திருப்பதாகத் தோட்டத்துக் காவலன் வந்து சொன்னன.

அவனைச் சித்தார்த்தர் 'உள்ளே வரவிடு' என்ருர்.

வந்தவன் அரசிளங்குமரனை வணங்கி "எங்கள் அரச குமாரர் ஓர் அன்னப்பறவையை அடித்து வீழ்த்திஞர். அது மலர் மிகுந்த இந்த நந்தவனத்தினிடையே வந்து விழுந்ததாம். அதைத் தங்களிடமிருந்து தாமதமின்றிப் பெற்று வருமாறு என்னை இங்கு அனுப்பினர். அதைத் தாங்கள் உடனே கொடுத்தனுப்புங்கள். நான் போக வேண்டும்" என்ருன்.

இதையெல்லாம் கேட்ட சித்தார்த்தர் மிக மனம் வருந்தி "உங்கள் அரசகுமாரர் என்ன காரியத்தைச் செய்தார்! என் உடலில் இந்த அம்பின் கூர்மையான நுனி லேசாக அழுந்திய போது எவ்வளவு வலியை உண்டாக்கியது தெரியுமா? இந்தச் சின்னஞ்சிறிய அன்னப்பறவையின் மெல்லிய உடலில் எவ்வளவு பெரிய அம்பைத் தைத்திருக்கிருரே உங்கள் அரசிளங்குமாரர். அது துன்பத்தால் எவ்வளவு துடி துடிக்கிறது என்பதைப் பார்! உங்கள் அரச குமாரருக்கு அம்பைப் பறவையின் மேல் எய்தால் அது அடிபட்டு துன்பத்தால் துடிதுடிக்கும் என்று தெரியாதா?" என்ருர் சித்தார்த்தர்.

சித்தார்த்தர் சொன்னதைக் கேட்டு தேவதத்தன் ஓடிவந்து கோபம் பொங்க "அன்னப்பறவையின் மேல் அம்பை எய்தால் அது அடிபட்டுத் துடிதுடிக்கும் என்பது எனக்குத்தெரியும்! நீ ஒன்றும் எனக்குச் சொல்லத் தேவையில்லை. அன்னம் அழகாய் இருந்ததால் அதைப் பிடிப்பதற்காக அம்பை எய்தேன். இதில் உனக்கென்ன கவலை. அன்னத்தை இப்படிக்கொடு" என்று சித்தார்த்தரின் கையிலிருந்த அன்னப் பறவையைத் தாவிப் பற்றப்போனுன்.

சித்தார்த்தர் விலகி நின்று “ தேவதத்தரே! இதை நான் கொடுக்கமாட்டேன். மேலும் தாங்கள் இதைத் துன்பப் படுத்துவீர்கள்.”

“சித்தார்த்தா ! நீ வாலிபத்தின் தலைவாயிலில் நின்று கொண்டிருக்கும் காளைப் பருவத்தினன். ஆனால் நீ இப் போது சிறு பிள்ளையைப்போல என்னிடம் பேசுகிறாய். நான் அடித்து வீழ்த்திய அன்னப்பறவையை என்னிடம் கொடுக்காமல் உன்னுடைய உடைமைபோல அதைக் கொடுக்க மறுக்கின்றாய். இது நீதியல்ல, கொடு இப்படி.”

“ கொடுக்கமாட்டேன், நீங்கள் என்னை என்ன செய்தா லும் அன்னத்தை ஒருநாளும் கொடுக்கமாட்டேன்.”

“ கொடுக்கமாட்டாயா ?...சரி உன்னிடம் வாதிட்டுப் பயனில்லை. வா...அரச நீதி மன்றம்போய் வழக்குரைப் போம் ” என்றான்.

பிறகு இருவரும் வழக்குமன்றம் சென்றனர். அறநூல் கற்றோர், அறிவில் பெரியோர் நடுநிலையில், நீதி வழங்கு வோர் கூடிய நீதி மன்றத்தில் தங்கள் தங்கள் வழக்கை எடுத்து வாதிட்டனர். அவர்கள் கூறிய வழக்கைக் கேட்டு நீதி மன்றத்துள்ளோர் தம்முள் வாதம் செய்தனர். இதுதான் நீதி என்று சிலர் சொல்லினர். இல்லை இல்லை அதுதான் நீதி என்று புகன்றனர் பலர். சிலர் ஒன்றும் சொல்ல மனந்துணியாமல் மௌனமாய் இருந்தனர்.

கடைசியில் புலமை மிக்க தலைவர் எழுந்து நின்று யாவரும் கேட்டிட “ உயிரை வாங்கிட முயலும் ஒருவருக்கு அந்த உயிரின்மேல் ஏது உரிமை ? இதை நீங்கள் சிந்தித் துப் பாருங்கள் ! உயிரைக் காப்பவரே என்றும் உயிர்க்கு உடையவராம். இதில் சற்றும் ஐயமில்லை, அன்னப்பறவை

இறந்திருந்தால் அது தேவதத்தனுக்குத்தான் உரிமையுடையது. அன்னம் இறக்கவில்லை. அதைச் சித்தார்த்தன் காப்பாற்றினன். காப்பாற்றியதால் அது சித்தார்த்தனுக்குத் தான் உரிமை உடையது. நீ அதை எடுத்துக்கொண்டு போ...சித்தார்த்தா" என்று நீதியைக் கூறி வழக்கை முடித்தார்.

தேவதத்தன் செய்வது இன்னதென்றறியாது யாவரையும் பழித்தும் இழித்தும் கூறிவிட்டு நீதியை ஏளனம் பேசி அவ்விடத்தைவிட்டு வெளியேறினன்.

## கண்கள் கலந்தன

“அமைச்சரே! அறிவின் செல்வரே! நீங்கள் அன்று என் மைந்தனுடைய எதிர்காலத்தைப் பற்றி முற்றும் உணர்ந்த முனிவர்களும், கனுநூல் கற்றவர்களும் கணித்துச் சொன்னதை அறிந்திருப்பீர்கள். என் உயிரினும் இனிய மைந்தன் இவ்வுலகில் பகைக்குலம் முழுவதையும் வேர் அறுத்து மன்னர் மன்னனுய் மணிமுடி சூடித் தரணி முழுவதும் தனியரசாள வேண்டுமென்பதே என் விருப்பம். ஆனல் அவனே ஆசையை அடியோடு அகற்றிவிட்டு, முற்றுந்துறந்த முனிவனுகி, நாட்டைவிட்டு நகரைவிட்டு காட்டில் சென்று கடுந்தவம் புரிவான்என்று சொல்கிருர்கள். வாழ்வில் எல்லா இன்பங்களும் பெற்றிருந்தும் அவற்றை இகழ்ந்து ஒதுக்கிவிட்டுத் தவ வாழ்வை மேற்கொள்ள விரும்புவது ஏனே என்று எனக்கு விளங்கவில்லை! அவன் இன்பத்துக்காக என் எழில் மாடத்தையே இன்ப நிலையமாக மாற்றி இருந்தும் அவனுடைய மனமோ அரண்மனை வாழ்விலும் அரச போகத்திலும் ஈடுபடாமல் பற்றற்று தாமரை இலைத் தண்ணீர்போல் தனித்தோடுகிறது; ஆகையினல் என் அருமை அமைச்சர்களே இதற்கு நீங்கள்தான் ஓர் உபாயம் சொல்லவேண்டும். அவன் விரும்பினல் இந்த மேதினி முழுதும் ஆளும் பெருமை பெறலாம் என்று அந்நாளில் அறிஞர்கள் சொன்ன உண்மை மொழியினை நீங்கள் மெய்ப்பிக்கவேண்டும். இதுவே என் வேண்டு

கோள் " என்று மன்னன் சுத்தோதனன் அரசவையில் அமைச்சர்கள் முன்னிலையில் சொல்லி முடித்தான்.

மன்னன் உரைத்ததைக் கேட்ட முதுபெருஞ்சான்றோரான அமைச்சர் தலைவர் எழுந்து நின்று " மன்னர் மன்னவ! எம் தலைவ! இது ஒரு சிறு நோய்! இந்த நோயை நீக்கிட காதலைப்போல் கைகண்ட மருந்து இம்மாநிலமீது வேறெதுவும் இல்லை. மைந்தனின் மனம் மங்கையரின் பருவ எழிலில் சிக்குண்டு மூழ்கவேண்டும். இளவரசன் இன்பம் அறியாச் சிறுவன். அழகு மங்கையரின் மதி முகவனப்பையும், அவர்களின் பார்வையில் பளிச்சிடும் மோகக் கவர்ச்சியையும், இதழின் சுவையையும் இன்னாள் வரையிலும் அவன் அறிந்தவனில்லை. அதனால் அவனை மனத்துக்கினிய மனையாளோடு வாழ வைப்பதே சிறந்த வழி என்று எனக்குத் தோன்றுகிறது. மண்ணாசையைவிடப் பெண்ணாசை மிக்க வலியது. ஆகையால் மன்னர் மன்னவ! மைந்தனுக்கேற்ற மங்கையர் திலகத்தைத் தேர்ந்தெடுத்து மணவினை நடத்துவோம் " என்றார்.

இதனை அங்குள்ளோர் யாவரும் ஆமோதித்தனர்.

அரசன் அமைச்சரை நோக்கி " மைந்தனுக்கேற்ற மங்கையர் திலகத்தை நாமே தேர்ந்தெடுப்பது நல்லதல்ல. அவனே கண்டு களிப்புற்றுத் தனக்குகந்த பெண்ணைத் தேர்ந்தெடுப்பதுதான் சாலச் சிறந்தது. நாம் அதற்கு ஒருவழி செய்ய வேண்டும். அதை எப்படிச் செய்வது? ஏதும் வழியுண்டானால் சொல்லுங்கள் அமைச்சரே!"

" மாநிலம் போற்றும் மன்னர் மன்னவ! மலர் மிகுந்த நந்தவனத்தில் அழகு நிறைந்த மங்கையர்களை உலாவவிட்டு அவன் விரும்பும் அழகும் மணமும் நிறைந்த பருவமங்கை ஒருத்தியைத் தேர்ந்தெடுக்கும்படி செய்யலாமே!"

"அமைச்சரே! சித்தார்த்தனின் உள்ளப்போக்கு மிகப் புதுமையானது. அவன் இதுபோன்ற காரியங்களில் இது நாள்வரை ஈடுபட்டதில்லை. நாம் மலர் மிகுந்த நந்தவனத்தில் மதிமயக்கும் மங்கையர்களைவிட்டு 'உன் மனதிற்குகந்த பருவமலர் ஒன்றை பறித்துக்கொள்' என்றால் அவன் வெற்றுப் புன்னகை புரிந்து 'எனக்குப் புதுமலர் ஒன்றும் வேண்டாம்' என்று சொல்லி அப்பால் சென்றுவிட்டால் அப்போது என்ன செய்வீர்கள்?" என்றான் மன்னன் வருத்தம் தோய்ந்த குரலில்.

மன்னவன் சொன்னதைக் கேட்ட அமைச்சருள் ஒருவன்-அறிவில் சிறந்தவன் எழுந்து நின்று "எழில் மிக்க இம் மண்டலம் முழுதும் ஆளும் மன்னவ! வில்லிலிருந்து பாயும் அம்பு உடலைமட்டுமே துளைத்துச் செல்லும், ஒரு மங்கையின் மதிமுகத்திலிருந்து பாய்ந்து செல்லும் வேல்விழியின் கூர்மை நெஞ்சத்தையே துளைத்துப் புண்ணாக்கிவிடும் தன்மையது. பாவையரின் மலர் முகம் கண்டு மயங்காத மனிதர்கள் இம்மாநிலத்தில் உண்டா? ஆதலால் நான் சொல்வதுபோல் செய்தால் நிச்சயம் உதய குமாரியை ஒத்த ஓர் இளங்கன்னியின் மைவிழி கண்டு நின் மைந்தன் மையலாவான். ஆதலால் தாங்கள் விரைவில் இங்கோர் விழாக் கொண்டாட ஏற்பாடு செய்யுங்கள். அதற்கு இச்சிறப்பு மிக்க நகரத்திலுள்ள அழகிய கன்னியர்க்கெல்லாம் அழைப்பு விடுங்கள். நம் நாட்டு ஆட்டமும் பாட்டும் அந்த அழகு மங்கையரின் பாதகமலங்களிலிருந்தும், பவழவாயிலிருந்தும் வெளிப்பட்டுத்தன் திறமையைக் காட்டட்டும். அப்போது ஆடலில், பாடலில், அழகில், இளமையில் சிறந்தவர்களுக்குச் சிற்சில பரிசுகளை இளவரசர் கையால் வழங்கிடச்செய்வோம். பரிசுகள் பெற அவன் பக்கம் வந்துசெல்லும் அழகிகளில் ஒருத்தியின் திருமுகத்தைக் கண்டு அவன்முகம் மலர்ச்சிபெற்றால் அந்த மங்கையர் மணியினையே அரசிளங்

குமரனுக்குரிய வாழ்க்கைத் துணைவியாக்குவோம். தானே கண்டு தேர்ந்த காதல்கொண்ட நங்கையோடு வாழவிரும்புதல் மனித இயல்பு " என்று கூறி முடித்தான்.

இதுவே " நன்று...நன்று " என்றுயாவரும் நவின்றனர்.

மன்னவனும் மணிமாடம் தன்னில் மகிழ்ச்சிதரும் அக்காட்சியைக் காண விரும்பினான்.

உடனே திக்கெட்டும் இச்செய்தி பரவியது.

" இந்நாட்டுள்ள எழில் மிகு தோகையர் அனைவரும் அரண்மனைக்கு வருக வருக " என அழைப்பு அனுப்பப் பட்டது.

அழகிய கன்னியர்க்கு அரசிளங்குமரன் பரிசுகள் பல வழங்குவான். அதில் வனப்பில் மிக்க வனிதாமணி இப்பாரெல்லாம் புகழும் பரிசினைப் பெறுவாள் என்ற செய்தியை மன்னரின் ஏவலாள் ஒருவன் நகரிலெல்லாம் பறை ஒலி முழக்கினான்.

அது கேட்ட அந்நகரத்துள்ள அழகிய கன்னியர் வைகறையில் துயில் நீக்கி நீராடிவிட்டுப் புதிய ஆடை அணிகளை அழகாக அணிந்து, கூந்தலுக்கு மணமிகுந்த மலர்கள் சூடி, மயக்குறுத்தும் விழிக்குமைதீட்டி, திரு நுதலுக்குத் திலகம் இட்டு, சிற்றடி சிவந்திடச் செம்பஞ்சு பூசி மணவறை புகும் மங்கையரைப் போல மன்னர் மாளிகையின் முன் வந்து கூடிநின்றனர்.

இந்த எழில் மிகு காட்சியைப் பொற்சிங்காதனத்தில் பொலிவுற அமர்ந்த அரசிளங்குமரன் பார்த்தான். மனத்தில் யாதும் சலனமின்றிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

பரிசுபெறும் பெண்கள் பாதச்சிலம்பசைய அன்ன நடை நடந்துவரிசைவரிசையாய் நாணத்தால் கண்கள் நிலம் நோக்க வந்து, கன்னம் சிவக்க, பரிசுகள் பெற்றுப் பணிந்து செல்லும் காட்சி யாவரும் கண்டு களிப்பதற்கு ஏற்றதாக இருந்தது.

சித்தார்த்தரின் முகம் மட்டும் இயற்கைப் பொலிவும் அமைதியும் தவழ அருள் பொலிந்து காட்சியளித்தது. அவர் இந்தக் கன்னியரின் கைக்கு 'எட்டாக் கனி' யாகவே இருந்தார்.

அப்போது முழுமதிபோன்ற முகமுடைய ஒரு மங்கை மனந்தடுமாறி நின்றிருந்தாள். அவளைச்சுற்றிநின்ற சுந்தரிகள் "இவள் அழகிற்கே அரசி; சற்றும் ஐயமில்லை, நிச்சயம் அர சிளங்குமாரரின் அன்பிற்கு இவளையன்றி வேறுயார் இணை யாக முடியும்?" என்று புகழுரைகூறி அவளைச் சித்தார்த்த ரின் அரியாசனத்தருகே அனுப்பினர்கள். அவள் நாண மிகுதியால் நடுக்கமுற்று, வழங்கும் பரிசினை வாங்கிடாது ஓடிச், சேடியரோடு சேர்ந்து நின்ருள்.

இவ்வாறு அந்நகர் எழில் மங்கையர்கள் ஒருவர் பின் ஒருவராய் மன்னவன் மைந்தனைக் கண்டு வணங்கிச்சென் றனர். இருந்த பரிசுகள் யாவும் தீர்ந்தன.

அந்த வேளையில் அழகின் செல்வி அங்கயற்கண்ணி திங் களைப் பழிக்கும் திருமுக அழகுடன் **யசோதரை** என்னும் பருவ நங்கை நேர் எதிராக நிமிர்ந்து நோக்கி வருவதுகண்ட மன்னர்மகனும் திடுக்கிட்டுத்,திகைப்புற்று 'என் நெஞ்சினைக் கவரும் இப்பேரெழில் மங்கை யார், என நினைத்து அவளை நோக்க அங்குள்ளோர் இதனைப் பார்த்து மகிழ்ந்தனர்.

அவள் சித்தார்த்தரின் அருகே வந்து "எனக்கு பரி சளிக்க ஒன்று மில்லையா?" என்று கூறி நின்ருள்.

"இருந்த பரிசுகள் யாவும் தீர்ந்தன. ஆயினும் மாநகர் போற்றும் மங்கையர் மணியே இதனைப் பரிசாய் ஏற்றுக் கொள்க" என்று கூறி தன் மணி மார்பில் கிடந்த மரகத மாலையைக் கழற்றி யசோதரைக் கன்னியின் சிற்றிடை சுற்றி சேர்த்துக் கட்டினர். அவ்வேளையில் கண்ணோடு கண்கள் கலந்து மகிழ்ந்தன.

# வாழ்வின் உண்மையைக் கண்டேன்

ஒருநாள் சித்தார்த்தர் தன் தந்தையிடம் நகரத்தைச் சுற்றிப்பார்த்து வருவதாகச் சொன்னார். மன்னனுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. எதை எடுத்தாலும் ஆழ்ந்து சிந்தித்துச் சீர்தூக்கி 'இது ஏன்?' என்ற கேள்வியை எழுப்பி அதற்கு முடிவு என்ன என்று கண்டு அறிவதிலே பெரும்பாலும் தன் வாழ்க்கையைச் செல வழித்துவரும் சித்தார்த்தரை வெளியே அனுப்ப அச்சந்தான். போகக்கூடாது என்று சொல்லவும் அவனுக்கு மனமில்லை. சித்தார்த்தர் இன்னும் என்ன சிறு குழந்தையா வெளியில் போகவேண்டா மென்று சொல்வதற்கு? சாரதியை அழைத்தான். அணி அலங்காரங்களுடன் கூடிய தேரைக்கொண்டு வரச் சொன்னார். இதற்கு முன்பே அவர் செல்லும் வழி நெடுக பிணி, மூப்பு, சாக்காடு போன்ற வாழ்வின் வேதனைக் காட்சிகள் அவர் கண்களில் படாத வண்ணம் ஏற்பாடு செய்திருந்தான்.

தேர் புறப்பட்டது. வழி நெடுக இளவரசர் வீதி உலா வருவதைக் கேள்வியுற்று மக்கள் திரள் திரளாகக் கூடி இருந்தனர். சித்தார்த்தரின் பேரெழிலைக்காண இளம் பெண்கள் தங்களை நன்றாக அழகு செய்துகொண்டு சாளரத்தின் வழியாகவும் சாலை ஓரத்திலும் கண்டுகளிக்க நின்று கொண்டிருந்தனர்.

தேர் ஓடிக்கொண்டே இருந்தது. சித்தார்த்தரின் கண்களும் நாலாதிக்கிலும் ஓடித்திரிந்தன.

திடீரென்று ‘ சாரதி ’ என்ருர் இளவரசர். அவர் குரலில் பட படப்பும் நடுக்கமும் தென்பட்டன.

“ என்ன இளவரசே ” என்ருன் சாரதி.

“ தேரை நிறுத்து. அதோ பார் ! அவன் ஏன் கோலூன்றி உடல் நடுங்க நிற்கிருன். அவனை என் அருகில் கூப்பிடு. அவன் தலை மயிரெல்லாம் வெளுத்துத் தொங்குகின்றனவே ! அவன் நம்மைப்போல நிமிர்ந்து நிற்க முடியாதா ? முதுகிலே ஏன் அவ்வளவு கோணல் ! வயிறு ஒட்டி வாய்வெந்து உடலெல்லாம் வீங்கி இருக்கிறதே !”

“ ஐயா நீர் யார் ? உமக்கு என்ன வேண்டும் ” என்று சித்தார்த்தர் மிக கனிவுடன் கேட்டார்.

“ இளவரசே...நான் பெருநோய் பிடித்த பிணியாளன். இந்த நோய் என் உடலை வாட்டி வதைக்கிறது. அதைவிட வயிற்றுப்பசி என் குடலைப் பிடுங்குகிறது. என் பசிபோக்க ஏதாவது உணவு கொடுங்கள் போதும். என் பிணி தீர்க்க உங்களால் முடியாது. அது உடன் பிறந்தே கொல்லும் வியாதி...! ”

“ ஆ...உடன் பிறந்த வியாதியா ! அப்படியாளுல் நான் பிறக்கும்போதே என்னுடனும் இந்தப் பிணி பிறக்கவில்லையே ! சில மனிதர்களுடன்தான் இந்தப் பிணி பிறக்குமா ? என்னைப்போன்ற அரச குமாரர்களுடன் பிணி பிறக்காதா ? இது என்ன உலகம் ! சாரதி இவனுக்கு வேண்டிய உணவைக் கொடுக்கச் சொல்லு. நாம் புறப்படுவோம்.”

தேர் ஓடியது. சித்தார்த்தரின் சிந்தனையும் ஓடிக் கொண்டே இருந்தது. கூனிக்குறுகி, உடல் தளர்ந்து, பிணி பற்றி, நரைத்து நிற்கும் அந்தக்கோர உருவம் அவர் மனக் கண்ணில் அப்படியே பதிந்துவிட்டது.

"சாரதி, நாம் பார்த்த பிணியாளன் ஏன் அப்படிக் கூனிக் குறுகி நின்றான்."

இளவரசே, "அவன் வயோதிகனாய் விட்டான். அதனால் நரை திரை விழுந்து மூப்படைந்தமனிதனாகிவிட் டான். இது வாழ்வில் ஒவ்வொருவருக்கும் ஏற்படக் கூடியதுதான். இதற்குத்தான் கிழத்தனம் என்று பெயர்."

"என்ன! ஒவ்வொருவரும் மூப்படைந்து முதுகு வளைந்து கோலூன்றி நடக்க வேண்டுமா?"

"ஆமாம் இளவரசே!"

சித்தார்த்தர் நிலைகலங்கி நின்றுவிட்டார்.

தன்னுடைய இளமையும் இதுபோலத் தளர்ந்து ஒடுங்கி விடும் என்பதை நினைத்துப் பார்க்கவே அவருக்கு மிக்க வேதனையாக இருந்தது.

"என்ன வாழ்வு இது. நீர்மேல் குமிழி போலல்லவா இந்த இளமை இருக்கிறது! அதற்குத்தான் எத்தனை சொகுசான வாழ்க்கை! சுற்றி நின்று சுகபோகம் தர எத்தனை சுகுண சுந்தரிகள்! இந்த மாறும் மாயவாழ்வை நிலை நிறுத்த என் தந்தை எத்தனைவித மாயா ஜாலங்களைச் செய்திருக் கிறார். என்னிடம் மாறாத அன்புகொண்ட மதிமுகமடந்தை யசோதரையும் ஒருநாள் முதுமைக்குப் பலியாகப் போகிற வள்தானே! வண்ணமலரும் வாசநீரும் கொண்டு அழகு படுத்தும் இந்த உடல் பிணியால் நொந்து புண்ணாகி நாற்ற

மெடுத்து வேதனைப் படுத்துகிறதே! அப்பப்பா...முதுமையும் பிணியும் எவ்வளவு பயங்கரமானது!''

சித்தார்த்தரின் நெஞ்சிலிருந்து ஒரு நீண்ட பெருமூச்சு வெளிவந்தது. அவர் உள்ளத்தின் வேதனையைக் குறைத்துக்கொள்ள வழி வகை காணாது தவித்தார்.

அந்த வேளையில் சோதனையாக ஒரு பிணத்தை நால்வர் தூக்கிச் செல்வதையும், அதைப் பின் தொடர்ந்து ஒரு இளம் மாது தலைவிரிகோலமாய் அழுது புலம்பி வருவதையும் கண்டார்.

நெஞ்சுருக்கும் இக்காட்சியைக் கண்டவுடன் சாரதியை நோக்கி "இது என்ன...! ஒருவனைப் படுக்கவைத்து நாலு பேர் தூக்கிச் செல்கிறார்களே! ஒரு இளம்பெண் முகத்திலும் மார்பிலும் தன் இரு கைகளாலும் அடித்துக்கொண்டு அழுகிறாளே! அவளுக்கு என்ன துன்பம் நேர்ந்தது? பிணி மூப்பு இவைகள் அவளிடம் வந்தடைந்து விட்டனவா? அப்படியானால் தூக்கிக்கொண்டு செல்கிறார்களே அவன் யார்? சாரதி, இதை விவரமாக எனக்குச் சொல்".

"இளவரசே...அவனுடைய வாழ்வின் இறுதி நாள் இது. அழுது புலம்பி வருபவள் அவனுடைய மனைவி. இனி அவனைத் தன் வாழ்நாளில் என்றுமே அவளால் சந்திக்க முடியாது. அவன் இறந்து பிணமாகிவிட்டான். இன்னும் சில மணியில் அவனுடைய உடல் மண்ணிலே புதைக்கப்படும். இதுதான் மனிதனுடைய வாழ்வின் முடிவு."

"மண்ணில் பிறந்த மனிதன் மண்ணோடு மண் ஆகிறான்" சித்தார்த்தருடைய உதடுகள் துடித்தன.

"சாரதி...மனிதன் எப்போது இறப்பான்? இதற்கு முடிவு காலம் எதுவும் உண்டா?"

"இல்லை இளவரசே பிறந்த மனிதன் இறப்பது உறுதி மரணம் என்று மனிதனைப் பற்றி மாய்க்கும் என்பதை யாராலும் முடிவாகச் சொல்ல முடியாது."

"மரணத்தின் பாதையை நோக்கிப்போகும் மனிதனுக்குத் தன் வாழ்நாளின் முடிவு எத்தகையது என்பது தெரியாது! என்ன விசித்திரம்! பிணி, மூப்பு சாக்காடு இவைகளிலிருந்து மனிதன் தப்ப முடியாது! என்ன வாழ்கை இது! மனிதன் சாவதற்குத்தானு பிறந்து வளர்கிருன்? சாவிலிருந்து விடுதலைபெற வழியே கிடையாதா? சாரதி என்னுல் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. மனங் குழம்புகிறது. இந்தப் பயங்கரமான உண்மையை இது நாள் வரை உணராமல் உண்டு களித்து உல்லாசமாக வாழ்ந்து விட்டேனே! மெல்லிய பூங்காற்றும், இளம் பெண்களின் மதுரமான தீங்குரலும், வேய்ங்குழலின் ஓசையும் என் மாளிகையைப்போல எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் என்றல்லவா நினைத்திருந்தேன்! ஆனுல் உண்மை அதற்கு மாருக இருக்கிறது. பிணி, மூப்பு, சாக்காடு இவைகளினுல் மனிதன் துயருற்று வேதனையடைந்து மாண்டுமடிகிருனே! இதை நிவர்த்திக்க வழியே கிடையாதா? சாரதி வேகமாக தேரை ஓட்டு. இதற்கு ஒரு முடிவுகாணத வரையில் என் மனம் அமைதி உருது." என்று ஏக்கத்தோடு சொல்லி முடித்தார். தேர் அரண்மனையை நோக்கி வேகமாக ஓடியது.

# துன்பம் ஒழிப்பேன்

பால்போன்ற நிலவு. சித்தார்த்தர் நிலா முற்றத்தில் நின்றபடி நிலையில்லா வாழ்வை எண்ணி அதில் சூழும் துன்ப இருளைப் போக்குவது எப்படி என்று எண்ணிக் கொண்டே இருந்தார். அவருக்கு எவ்வளவு நேரம் அப்படியே சிலையாக நின்றிருந்தோம் என்றே தெரியவில்லை. பனியால் அவருடைய ஆடைகள் நனைந்திருந்தன. நிலவு வானத்தின் உச்சியைத் தாண்டிக் கீழே இறங்கிக்கொண்டிருந்தது.

ஏதோ முடிவுக்கு வந்தவர்போல் பள்ளி அறையை நோக்கிச் சென்றார். பால்வடியும் வதனத்துடன் துயிலும் பாலகனின் பக்கத்தில் படுத்துறங்கிய யசோதரையைக் கண்கொட்டாது பார்த்துக்கொண்டே இருந்தார். திருமணம் நடந்தநாளிலிருந்து வாழ்வின் உண்மைக் கோலத்தைக் கண்ட இன்றுவரை யசோதரையின் அளவிடற்கரிய அன்பையும் சேவா உணர்ச்சியையும் அவரால் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. சில வேளைகளில் அவர் உள்ளத்தில் உதித்திடும் எண்ணங்களை வாக்கினிலே வெளியிட எண்ணி நினைக்கும்போதே அதைச் செயலாக்கி அவர் எண்ணத்தை அவள் நிறைவுபடுத்தியதைக் கண்டு அவர் பூரித்துப் போயிருக்கிறார். தனக்குத் தெரியாமலே உள்ளமும் உள்ளமும் உறவாடி பேசிக்கொள்வதை அவர் அனுபவத்தில் கண்டிருக்கிறார். இந்த ஆழங் காணமுடியாத அன்பின் உருவை எப்படித் தனியே விட்டுச் செல்வது?

அவருடைய மனக்கடலில் எண்ணற்ற எண்ண அலைகள் எழுந்தன. உள்ளத்தில் ஒரு பெரும் போராட்டம் மூண்டது.

"இந்த இரவே எனக்கேற்ற இரவு. என்னுடைய குறிக்கோளை நோக்கி நான் முன்னேறவேண்டும். நானும் மணி முடிதாங்கி மன்னர் மன்னனாய்ப் பார்புகழ அரசாளு வதா? அல்லது உலகிலுள்ள உயிர்களெல்லாம் உய்ய நாடு இழந்து நகரும் இழந்து வீடும் வாசலும் விட்டுத் தன்னந்தனியாய் தரணியின்மீது ஓர் ஆண்டியாக அலைந்து திரிவதா? இதில் எந்த வாழ்வு வேண்டும்? மனமே நீ இதைத் தெளிந்து சொல்லு".

நீண்ட நாட்களாகவே துக்கத்தின் மூலகாரணத்தைக் கண்டறிய வேண்டுமென்ற முடிவான எண்ணத்தில் இருந்த சித்தார்த்தருக்குக் காலம் கூடிவந்தது.

மனதிலே உறுதிகொண்டு "இதுவே நல்ல தருணம். இமைப்பொழுதும் நான் இங்கு தங்கமாட்டேன். எவரும் தடை செய்ய முடியாத இந்நேரத்தில் நான் சென்று விடுவேன். ஆனால் என்னை விட்டுப் பிரியாமல் என்னுடன் ஒன்றி உறையும் அழகின் செல்வி யசோதரையை விட்டுப் பிரிகின்றேன். இதனால் நான் குற்றம் செய்தவனாகிவிட மாட்டேன். 'மாநில முழுவதும் அறநெறி இதுவென அறிந்துவா' என்று அவள் துயிலும் மதிமுகம் ஆணையிடு வதை நான் அறிகின்றேன்.

"இனி நான் உலகில் செய்வதற்கரிய அரும்பெரும் செயல்கள் அனைத்தும் செய்து முடிப்பேன். இறுதியாக என் உள்ளம் கொண்ட உண்மையினை உறுதியான முடி வுடன் கைக்கொள்வேன். பற்பலநாள் பகலும் இரவும் ஆராய்ந்தறிந்த உண்மை இதுதான். பரம்பரையாய் முடி தாங்கும் முறையில் நான்கொண்ட ஆசையை விட்டொழித்

தேன். போர்வெறி கொண்டு ஆளும் மன்னரை வாளுக்கு இரையாக்கி நீள்நிலம் பற்றும் நினைப்பை ஒழித்தேன். பூதலமெல்லாம் போர்க்களம் ஆக்கிய பாதகன் என்ற பழிச்சொல் வேண்டாம். ஓடி ஒழுகும் உதிரப் பெருக்கில் என் தேர்க்கால் புதைய, திசைதோறும் வெற்றிமேல் வெற்றி சூழ வீர வேந்தனுய் வாழ்ந்திட விருப்பம் எள்ளளவும் என் உள்ளத்தில் இல்லை. சிறுமதி கொண்டு தீவினை செய்யேன். பொறுமையைத் தினமும் போற்றி ஒழுகுவேன், புழுதி நிறைந்த பூமியே எனக்குப் படுத்துறங்கும் பஞ்சுமெத்தை. பாழிடமான பாலைவனமே வாழிடமான சோலைவனம். எல்லா உயிர்களிடத்தும் அன்பாய், தோழமைகொண்டு பழகுவேன். பணி செய்யும் எளியோர் அணியும் பழைய துணிகளையே நானும் அணிவேன். தெருத் தெருவாய் அலைந்து திரிந்து பெற்ற சோற்றை உண்டு பசி போக்குவேன். மரநிழலும் மலைக்குகையுமே நான் அண்டி வாழுமிடம். இரவும் பகலும் எந்த நேரமும் பாரில் உயிர்கள் படுந்துயரை எண்ணி என் நெஞ்சம் புண்ணுகிவிட்டது. அதனுல் இன்பவாழ்வை வெறுத்து நீக்கினேன். துன்ப வாழ்வைத் துணிந்து போற்றினேன்.

" சிறியவரானுலும் பெரியவரானுலும் இரக்கமுள்ளோரே சிறந்தவர் ஆவார்.

" சலியாமல் எவனெருவன் உழைத்திடுகிருனே அவனுடைய உழைப்பின் உயர்வு ஒருநாள் வெளிப்படாமல் போகாது.

" ஆணுயிருந்தாலும் பெண்ணுயிருந்தாலும் எந்த ஜாதியைச் சேர்ந்தவராயினும், எவர் நேர்மையுடன் நடக்கிருர்களோ, எவர் கடமைகளை குறைவறச் செய்கிருர்களோ அவர்களே உண்மையாக வாழ்பவர் ஆவார்.

“எண்ணற்ற மனிதர்கள் காலையும் மாலையும் கண்கள் இரண்டும் மூடி மந்திரங்களை முணுமுணுத்து ஜபங்கள் செய்கின்றனர். வானம் முட்டும் உயர் கோபுரங்களை எழுப்புகின்றனர். கோவிலில் நித்தம் நித்தம் நடைபெறும் காரியங்களுக்கு நிலமும் பொருளும் கொடுத்து அதன் புகழ் குன்றுமல் காக்கின்றனர். துடிக்கத் துடிக்க உயிர்களை வதைத்துப் பகுத்தறிவின்றி பலியிடுகின்றனர். அன்ன சாலை ஆயிரமும், அந்தணர்கள் நிதமும் உண்டுகளிக்க உணவு விடுதியும் அமைத்திடுகின்றனர். மண்ணில் பிறந்த மாந்தர்க்கு யாதும் நலம் செய்யாத தேவர்களை நோக்கி ‘ஹரியே, சிவனே’ என்று போற்றித் துதிக்கின்றனர்.

“இதனால்—?

“வாழ்க்கையில் நித்தம் வளரும் துயரம் ஒழிகிறதா?

“ஆசை கொண்டு விரும்பிடும் பொருளை அடைய முடிகிறதா?

“நாம் இழந்த ஒரு பொருளை மீண்டும் அடைய முடிகிறதா?

“நரை திரை மூப்பால் வரும் முதுமையை ஒழிக்க முடிகிறதா?

“எல்லாவற்றையும்விட ஒவ்வொருவரையும் பற்றிடும் சாவின் பிடியிலிருந்து விடுதலை பெற முடிகிறதா?

“பிறந்து பிறந்து உயிர்கள் அடையும் ஓயாத் துயரை ஒழித்து என்றும் நின்று நிலவும் நித்தியானந்த வாழ்வை அடைந்ததுண்டா?

“அருமை மங்கையர் அன்பு நிறைந்து நோற்கும் பற்பல நோன்புகளாலும் பாடும் பக்திப் பாடல்களாலும் எய்திய நன்மைகள் எதுவும் உண்டா?

“ அவர்கள் காலையில் எழுந்து கூட்டி மெழுகிச் சுத்தம் செய்து துளசிமாடம் தொழுவதனாலும், பாலும் பழமும் பல வகைப் பலகாரங்களும் பக்தியோடு படைப்பதனாலும் பேறு காலப்பெறு நோக்காடு **கொஞ்சமாவது குறைந்ததுண்டா?”**

“ உலகில் வாழும் உயிரின் பிறப்பிடம் அறிவிற்கெட்டாத அரிய விஷயமாயினும் அவ்வுயிர் படிப்படியாய் அணுவிலிருந்து ஆளாகி மற்றும் அவ்வழியே திரும்பித் திரும்பி வருதல் இயல்பே. ஆகையால் புவிமீதுள்ள பொருள்கள் அனைத்தும் சுற்றம்போலத் தொடர்புடையன.

“ அஞ்ஞான இருளில் வழிதெரியாமல் தடுமாறித் தடுக்கி விழும் மனிதனின் அறிவிலே புது ஒளி காட்டிடில் இவ் வையம் முழுவதும் வாழ்வது திண்ணம்.

“ கற்களைத் தட்டி ஒருவன் கனலைக் காட்டுவதற்குமுன் மக்கள் குளிரினாலும் கூதலினாலும் வாடி வருந்தினர்.

“ காலமறிந்து பயிர் செய்து ஒருவன் தானியம் எடுத்துத் தருவதற்கு முன் மிருகங்களைப்போல் பச்சைப் புலாலைப் பல்லால் கடித்து உண்டு உலகில் வாழ்ந்து வந்தனர்.

“ பாரில் பேசிப் பழகும் மொழி ஒருவன் நாவில் உதிக்கும் முன்னம் மனிதர் ஊமையராய் உளறித் திரிந்தனர்.

“ ஏட்டில் எழுதும் எழுத்தின் வடிவை ஆராய்ந்தறிந்து அமைப்பதன் முன்னம் கையால் சைகை காட்டி அலைந்தனர் மனிதர்.

“ ஓயாது உழைக்கும் உழைப்பினாலும், தளராத ஊக்கத்தாலும், தன்னலமில்லாத தியாகத்தாலும் இவ்வுலகத்தை உயர்த்திவிடலாம்.

"எனக்கு உடலில் உறுதியும் ஊக்கமும் உள்ளது. பொருளிலும் புகழிலும் அறிவிலும் சிறந்துள்ளேன். இந்த மண்ணுலகையெல்லாம் ஆளும் மன்னர் மன்னனாய் வாழ்வதற்குரிய குலத்தில் பிறந்தேன். காதல் விருந்தை மாந்தி மாந்தி அதன் இன்பத்துறையில் மூழ்கியுள்ளேன். நரை திரை மூப்பைக் கண்டு வெறுப்பு மிகுந்து மனங்கலங்கி விரக்தனாகாது, நன்மை தீமை எந்நாளும் ஒன்றுய்க் கலந்திருக்கும் இவ்வுலகில் வாழ்வதில் மகிழ்ச்சியுற்றேன். புவியில் நான் விரும்பிடும் அழகிய பொருளைத் தேர்ந்தெடுத்துச் சொந்தமாக்கிட எனக்குச் சுதந்திரமுண்டு. இருந்தும் நான் அதற்காக வாழ விரும்பவில்லை. மண்ணில் ஒரு மனிதன் தனக்கென வாழா பிறர்க்குரியாளன் என்று மக்கள் போற்ற வாழ்வேன். அன்பால் அருளால் துன்பமனைத்தையும் அறவே ஒழித்து இவ் வையத்து மாந்தரெல்லாம் விழிப்புற்று உய்யும்வழிகாட்டிட உழைப்பேன். இதுவே என் எண்ணம்."

"இந்த நாட்டில் உள்ள ஒவ்வொருவரின் இதயத் துடிப்பையும் நான் நன்கறிவேன். என்னை வா...வா...என் றழைக்கும் மின்னும் சுடரொளியே இதோ வருகின்றேன். துன்பத்தால் அழுது புலம்பும் துயருடை மாந்தர்களே! கவலை வேண்டாம். நீங்களும் உங்கள் மக்களும் வாழ என் வாழ்வைத் துறந்து, இளமையைத் துறந்து, மனைவியை விட்டு, அரண்மனை வாழ்வையே நீத்து வருகின்றேன்.

"என் நினைவிலிருந்து நீங்காத இன்னமுதே! பற்றற்று நிற்கும் என்னை பற்றிப் படர்ந்த இளங்கொடியே! அன்பின் உருவே! யசோதரையே! உன்னையும் நம் காதலில் மலர்ந்த கண்மணியையும் மறந்து செல்ல மனம் துணிகின்றேன். உன்னுடைய பொலிவான முகத்தில் நிலவிடும் அமைதியே என் உள்ளத்திலும் நிறைந்திருக்கிறது. இந்த மண்மீது வாழும் மாந்தரெல்லாம் துயர் ஒழித்து ஆனந்த வாழ்வடைய

சலியாதுழைப்பேன். உண்மை ஞானம் இவ்வுலகெல்லாம் ஒளிரச் செய்வது என்னுடைய கடமை என்னைப் பிரிவதனுல் வருந்தி வாடாதே! அன்னமே! அழகே! எனக்கு வாய்த்த நல் மனைவியே! என் இளஞ் செல்வமே! தந்தையே! தரணிவாழ் மாந்தரே! நான் போகிறேன்! இனி ஒருகணமும் இங்கு தங்கிடேன். **மன்னுயிரெல்லாம் அடையும் துன்பம் அனைத்தும் ஒழிப்பேன்"** என்று சொல்லி ஞானி சித்தார்த்தர் அரண்மனையை விட்டு வெளியேறினுர்.

## தளிரும் சருகும்

அரண்மனையை விட்டு வெளி வந்த சித்தார்த்தர் **சந்தகன்** என்ற அரண்மனைப் பணியாள் விழித்துக்கொண்டிருப்பதைப் பார்த்தார். அவனை அழைத்துக் **கண்டக**மென்னும் பெயருள்ள தன் குதிரையை விரைவிற் கொண்டு வருமாறு அவனுக்கு உத்தரவிட்டார்.

சந்தகன், அரசரின் அனுமதி இன்றி இளவரசரின் கட்டளையை அவ்விரவில் நிறைவேற்றலாமோவென்று சிறிது தயங்கினன். பிறகு சித்தார்த்தரிடம் கொண்ட அன்பால் யாதும் மறுமொழி பகராது குதிரையைக் கொண்டுவந்தான்.

சித்தார்த்தருடைய சிந்தை முழுவதும் தனக்கேற்ற நல்லாசிரியர்கள் எங்கே கிடைப்பார்கள் என்ற கவலையில்மூழ்கி இருந்ததால், தான் மூன்று யோசனை அளவு குதிரைமேல் சவாரிசெய்து வந்ததையும் மறந்திருந்தார்.

இரவு நீங்கி உலகத்தின் கண்ணாகிய கதிரவன் உதயமானன், அப்பொழுதுதான் சித்தார்த்தர் தான் இருக்கும் இடம் **பார்க்கவரின்** ஆசிரமம் என்று உணர்ந்தார். அங்கே அமைதியாக உறங்கும் மான்களையும், கவலையற்று வாழும் பறவைகளையும், பால்பொழியும் பசுக்கூட்டங்களையும் பார்த்த சித்தார்த்தரின் உள்ளம் குளிர்ந்தது.

சற்று களைப்பு நீங்கியதும் குதிரையிலிருந்து கீழே இறங்கிக் குதிரையை அன்போடு தடவிக்கொடுத்தார். தன்னைப் பின் தொடர்ந்து ஓடிவந்த சந்தகனை அன்பு பொழியும் கண்களால் பார்த்து "பல நாட்களாக நான் அடைய வேண்டுமென்று நினைத்துக்கொண்டிருந்த இடத்தை இப்பொழுது அடைந்துவிட்டேன். சந்தகா, இந்தக் குதிரை அதி வேகமாக ஓடக்கூடியது. நீ அதைக் கவனித்துக்கொள். நீ என் மேல் குன்றாத அன்பு கொண்டதால் அல்லவா என்னைப் பின் தொடர்ந்து வந்தாய். நான் பெருங்காரியம் ஒன்றில் மனத்தைச் செலுத்தி இருந்த போதிலும் உன்னை மறக்கமாட்டேன். உன்னைப் போன்ற பணியாளர்கள் கிடைப்பது அரிதிலும் அரிது. சிலருக்குத்தான் தன் தலைவனிடம் அன்பிருக்கும்; ஆனால் உதவி செய்யத்திறமை இருக்காது. சிலருக்குத் திறமை இருக்கும். ஆனால் அன்பு இருப்பது அரிது. இரண்டும் உன்னிடம் ஒன்றாகக் குடி கொண்டிருக்கின்றன. பற்றுதல் இழந்த என் மனதிற்குக்கூட உன்னிடத்தில் பற்று உண்டாகிறது.

"நீ ஒருவிதப் பயனையும் கருதாது என்னிடம் அன்பு காட்டுகிறாய். அந்த அன்பை அளக்கப்போனால் அது கடலை விடப் பெரிதாக அளக்கமுடியாமல் போய்விடும். உலகில் யாரும் எதையும் எதிர்பாராமல் ஒரு காரியமும் செய்வதில்லை. உன்னைப்போல் காரணமற்ற நட்புடையவன் எங்கும் கிடைக்கமாட்டான். எனக்கு மிகவும் பிரியமான காரியத்தை நீ செய்துவிட்டாய். நான் விரும்பிய காட்டிற்கு வந்துவிட்டேன். நம்முடைய உறவு இன்றோடு முடிவுபெற்றது. குதிரையை ஓட்டிக்கொண்டு நீ திரும்பிப்போ" என்று கூறிக்கொண்டே சித்தார்த்தர் தன் கழுத்தில் அணிந்திருந்த விலையுயர்ந்த ஆபரணங்களைக் கழற்றி அவனுக்கு நன்கொடையாகக் கொடுத்தார். கொடுத்தவர் தமது மணிமுடியையும் எடுத்து அவன்கையில் வைத்து " இதனை நான் அன்புடன்

கொடுத்ததாகச் சொல்லி அரசரிடம் கொடு. என்னிடத்துள்ள பாசத்தை முற்றும் மறக்கும்படி நான் சொன்னதாகச் சொல்லு. இல்வாழ்க்கையின் வழியாகத் துக்கக்கடலை நீந்து தற்குரிய தெப்பம் எனக்குக் கிடைக்காததினுல்தான் நான் அரசபோகத்தைப் பிரிந்து வந்தேன் என்பதையும் தெரிவி. அவரிடம் அன்பில்லாமலோ, கோபம் கொண்டோ நான் நாட்டைத் துறக்கவில்லை. ஆகவே என்னைப்பற்றி வருந்த வேண்டாம். நாம் எவ்வளவுநாள் சேர்ந்திருக்க முடியும்! ஒரு நாள்பிரியவேண்டியவர்கள் தானே! என் மனமோ துக்கத்தின் மூலத்தைக் காணத்துடிக்கிறது. துன்பத்தை நீக்குவதற்காக வெளிவந்த என்னைக் குறித்து வருந்துவது சரியல்ல. பணத்துக்காக எவ்வளவோ உறவினர்கள் கிடைப்பார்கள். அறம் செய்ய உறவினர்கள் கிடைப்பது அரிது. நான் சிறுவயதில் வந்து விட்டேன் என்று வருந்தவேண்டாம். உயிர் சஞ்சலமாக இருக்கும்பொழுது அறத்திற்கு அகாலம் என்பது கிடையாதல்லவா? எல்லாக் காரியத்திற்கும் இடையூருக மரணம் காத்திருக்கும்போது வாழ்வை நம்புவது மதியீனம் என்று நீ அவரிடம் சொல்லவேண்டும்.

“சந்தகா நீ இவ்விதம் அரசரிடம் சொல்லி அவர் என்னை மறந்துவிடும்படி செய். என்னிடம் இல்லாத தீய குணங்களையாவது அவரிடம் எடுத்துக்காட்டி அவரை வருந்தாமல் இருக்கச் செய்” என்று சித்தார்த்தர் சொல்லிமுடித்தார்.

சந்தகன் மனம் நொந்து கண்ணீர் மல்க மிக்க பணிவுடன் கை கூப்பி வணங்கி “இளவரசே தங்களுடைய இக்கடுமையான முடிவு உறுதியானக் கல்நெஞ்சையும் கரைத்துவிடும். அன்பினுல் கனிந்து, வயதால் தளர்ந்து நிற்கும் தங்கள் தந்தையின் உள்ளத்தைப்பற்றி நான் சொல்லவும் வேண்டுமா? அரசர் உங்களிடம் தீராத பாசங் கொண்

டவர். அன்பே உருவானவர். அவரை நாஸ்திகன் தெய்வீகத்தை மறப்பதுபோல அவரை விட்டுவிடுவது சரியல்ல. நன்றி கெட்டவன் உபகாரத்தை மறப்பதுபோல் அன்னை யசோதரையை மறப்பதும் முறையல்ல. வருத்தமுற்றவன் புகழை அலட்சியம் செய்வதுபோல நீங்கள் ராகுலனைக் கவனியாமல் உதறுவது அறமா? காட்டில் உங்களைத்தனியே விட்டு, கொதிக்கும் நெஞ்சோடு நான் எப்படி நகரம் செல்வேன். அரசரிடமும் அந்தப்புரத்திலும் நான் தகுந்த பதிலை எப்படிச் சொல்ல முடியும்? உங்களைப்பற்றிக் குறை கூறச் சொன்னீர்கள். நான் எப்படி இல்லாததைச் சொல்வேன். அப்படி நீங்கள் இல்லாதபோது உங்களைப்பற்றிப் பொய் சொல்லிய என் உடலை இவ்வையம் சுமக்குமா? சந்திரனிடம் வெம்மை இருப்பதாகச்சொன்னால் கேட்கிறவர்கள் நம்புவார்களா? ஆகவே தாங்கள் தயவுசெய்து அரண்மனைக்குத் திரும்புங்கள்" என்றான்.

இப்படி மனமுருக வருந்தமுற்றுச் சந்தகன் கூறியசொற்களைக் கேட்டுச் சித்தார்த்தர் சிறிதும் கலங்கவில்லை.

மீண்டும் தெளிவாக தான் கொண்ட முடிவின் உண்மையை விளக்கி அவனைப்போகும்படி வேண்டினார்.

"சந்தகா, வீணாக வருந்தாதே! நான் பிரிந்துவிட்டதாக வருந்துகிறாயே. அப்படியில்லாமல் நான் உங்களுடனே இருப்பதாக வைத்துக்கொள். ஆனால் சாவு நம்மைப் பிரிக்காமல் விட்டுவிடுமா? அதோ அந்த மாந்தளிரைப்பார்! என்ன செழுமையான வனப்புடன் சிவந்து பளபளக்கிறது. ஆனால் அதை ஒத்து சற்றுமுன் பிறந்த தளிரோ சருகாகிக் காலவேகத்தில் நிறம் மாறிக் காற்றில் உதிர்ந்து கீழே கிடக்கிறது. மற்றவர்களின் பிரிவும் அப்படித்தானே! நீ மனங் கலங்காதே.போ. நான் மரணத்தை வென்றுதான் வருவேன்.

அல்லது இந்த மண்ணிலே மடிந்துகிடப்பேன். இதுவே என் உறுதியான முடிவு'' என்ருர்.

சந்தகனிடம் இப்படிக்கூறிவிட்டு அருகில் நின்றிருந்த தன் குதிரையை அன்பாகத் தடவிக்கொடுத்தார். அதன் செயலை நினைந்து "நீ என்னை இங்கே சுமந்து வந்து எனக்குப் பேருதவி செய்தாய். அதன் பயன் உனக்குத் தாமதியாமல் கிடைக்கும்'' என்று சொல்லி அதைச் சந்தகனிடம் ஒப்புவித்தார்.

பிறகு உறையிலிருந்து வாளை உருவித்தன்நீண்ட முடியை அறுத்தெடுத்தார். அப்போது அவ்வழியே வந்த வேடன் ஒருவனை அழைத்து அவன் அழுக்கேறிய உடைகளை வாங்கி அணிந்துகொண்டு தன் ஆடைகளை அவிழ்த்து அவனிடம் கொடுத்தார்.

இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த சந்தகனின் நெஞ்சம் குமுறியது. கண்ணீர் பெருக அவர் கட்டளையை மீறுவதற்கு அஞ்சி மனம் புழுங்கிக் குதிரையுடன் நகருக்கு மீண்டான்.

# கலத்திலே கறந்து தா

நள்ளிரவு...

சித்தார்த்தர் தன்னந்தனியே காடுவழியே பல இடங்களைக் கடந்து, கிடைத்த உணவுகளை வாங்கி உண்டு உலகம் உய்யும் வழிகண்டிட, சிந்தித்த வண்ணம் கல்லிலும் முள்ளிலும் நடந்து சென்றார். அவர் கால்கள் புண்பட்டு ரத்தம்போல் கன்றிச் சிவந்திருந்தன. அவர் உடல் தளர்ந்தாலும் உள்ளம் **நீள்நிலம் மீது நித்திய ஆனந்த வாழ்வை அடையும் வழி எது?** என்ற வினாவிற்கு விடை காணத் தவித்துக் கொண்டிருந்தது. மாநிலமீது மக்கள் அடையும் துன்பம் அனைத்தும் ஒழிப்பேன், என்ற உறுதியுடன் குருதி கொட்டும் கால்களோடு காடு வழியே நடந்து சென்றார் அவர்.

இருள் சூழ்ந்த உலகில் ஒளிபரவும் வேளை; கால்கள் ஓயவில்லை. கருத்தினிலே, இவ்வுலகில் என்றும் அழியா இன்பம் அடையவேண்டும் என்ற அவா குடிகொண்டிருந்தது. அதனால்தான், மன்னர் வாழ்வை மறுத்தார். தந்தையை மறந்தார். தனயனைத் துறந்தார். மங்கை யசோதரையின் மதி முகம் நீத்து, இரவும் பகலும் இடை விடாது எங்கும் நடந்து மெலிந்து நலிந்தார். ஒரு நாள் கொடிய வெய்யிலில் கைகால்கள் தளர்ந்து, கண்களும் மூட, மூச்சும் அடங்கி உயிரும் உடம்பில் ஊசலாடச் சோர்வுற்று மயங்கிக் கீழேவிழுந்தார்.

அவ் வேளையில், ஆடுகள் மேய்த்துவந்த ஆயர்குலச் சிறுவன் ஒருவன், வழி நடையில், அன்பே உருவான அண்ணல் வெய்யிலில் காய்ந்து கிடப்பதைக் கண்டான்; நெஞ்சம் பதறினான். வையகம் வாழ்ந்திடவே பிறந்த மாதவச் செல்வன் முகம், வெய்யிலில் வெந்திடாமலிருக்கத் தழைகளை வெட்டி அருகில் நட்டு நிழல் கொடுத்தான்.

மயக்கம் தெளிவிக்க என்னசெய்வது என்றுஏழைச்சிறுவன் ஏங்கி நின்றான். உயர் குலத்தவரை எளியேனாகிய நான் தீண்டுவது தகாதே எனச் சிந்தை கலங்கினான். உள்ளந் தெளிந்தவுடன், வெள்ளாடு ஒன்றை இழுத்து வந்து, வள்ளல் மயக்கம் ஒழிய பாலை வாயில் கறந்து விட்டான்

அவரைச் சுற்றி நட்டிருந்த தழைகளெல்லாம் நாற்புறமும் கவிந்து, கட்டிய மாளிகை போல் வனத்தில் காட்சியளித்தன. கள்ளமில்லா நெஞ்சமுடைய சிறுவன் கைகூப்பி அண்ணலைத் தொழுதபடி அவர் அருகே நின்றான்.

நிலத்தில் கிடந்த சித்தார்த்தர் மெல்லக் கண் விழித்து மெல்ல நிமிர்ந்து, தலைதூக்கி "கலத்திலே கொஞ்சம் பாலைக் கறந்து தா" என்றார்.

சிறுவன் பதை பதைத்துஐயனே, "நான் ஓர் இடையன். உங்களை என்கையால் தீண்டேன். நான் ஒருகாட்டு மனிதன். இந்தக் காரியம் என்னால் ஆகாது" என்றான் அடங்கி ஒடுங்கி பயந்தபடி.

அவனுடைய அறியாமையைக் கண்டு வருந்திய சித்தார்த்தர் உலகம் புகழும் படியான அமுதமொழியினைப் பகர்ந்தார்.

"அப்பா, துன்பம் வரும் போதும் உள்ளம் இரங்கிடும் போதும் மாந்தர் உடன் பிறந்தவர் போல் உறவு கொள்வார்கள்.

“நம் உடலில் ஓடும் உதிரத்தில், கண்களிலிருந்து உதிரும் கண்ணீரில் நாம் தேடி ஆராய்ந்தாலும் சாதி தெரிவதுண்டா?

“இயற்கையிலே எல்லா மனிதரின் உடலிலும் ஓடும் இரத்தம் சிவப்பு நிறமானதுதான். எல்லார் கண்களிலிருந்தும் ஒழுகும் நீர் உவர்ப்பானதுதான்?

“நெற்றியில் திருநீறும் மார்பில் பூணூலும் பூண்டு எவரும் இப் பூமிதனில் பிறந்ததில்லை.

“பிறப்பினுல் எவர்க்கும் உலகில் பெருமை வராது. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் அப்படி பிறப்பு ஒரே தன்மையாய் இருப்பதால், நாம் சிறப்புற வேண்டுமானுல் நல்லது செய்ய வேண்டும்.

“அப்படி நன்மை செய்யாதவரே அருகில் சென்று நிண்டத்தகாதவர் ஆவார்”

இவ்வாறு ஏழைச் சிறுவனுக்கு அறிவுரை கூறி “தம்பி கலத்திலே கொஞ்சம் பாலைக்கறந்துதா எனக்கு” என்று கேட்டார் சித்தார்த்தர்.

ஆயர் குலச்சிறுவனும் அகம் மகிழ்ந்து அறியாமை இருளைப் போக்கிய அண்ணலை வணங்கி கலத்தினிலே பாலைக்கறந்து அளித்தான் ஞானி சித்தார்த்தருக்கு.

அவரும் அதனை வாங்கியுண்டு களைப்பு நீங்கினுர்.

# உயிர்க் கொலை வேண்டாம்

ஒரு நாள் சித்தார்த்தர் மலைச்சாரல் வழியே வந்து கொண்டிருந்தார். அங்கு ஆட்டு மந்தை ஒன்று மேய்ந்து கொண்டிருப்பதைக்கண்டார். அதன் நடுவில் காலொடிந்த ஆட்டுக்குட்டி ஒன்று நொண்டி நொண்டி வேதனையுடன் தன் தாயிடம் செல்வதைப் பார்த்தார் சித்தார்த்தர். நெஞ்சம் பதறிற்று. ஓடிப்போய் அதனை வாரி எடுத்துத் தன் தோளில் சுமந்து கொண்டு தாய் ஆட்டைப் பார்த்தார்.

"என்ன கொடுமை இது! காடுகளை எல்லாம் சுற்றி அலைந்து ஓடிவரும் ஆடுகளை இப்படியா அடித்துவிரட்டுவது? காலொடிந்து உதிரம் சிந்திவடியும் இந்தச் சின்னஞ்சிறு ஆட்டுக்குட்டியைக் கண்டு தாய் ஆட்டின் முகத்தில் எத்தனை வேதனை தோன்றுகிறது? ஓர் அடி எடுத்து வைத்தவுடன் நடக்க முடியாமல் வாடும் தன் சேயை எவ்வளவு இரக்கத்துடன் பார்க்கின்றது? இனி நான் இதனைத் துயர் அடைய விடமாட்டேன்!" என்று எண்ணி அதனை அன்புடன் தடவிக் கொடுத்தார்.

அவ்வேளையில் ஓர் இடையன் அங்கு நின்ற ஆட்டை யெல்லாம் ஒன்று திரட்டி அடித்து விரட்டி ஓட்டினன்.

'இந்தக் கொடிய வெய்யிலில் இந்த ஆடுகளையெல்லாம் ஏன் இப்படி விரட்டி அடித்துக்கொண்டு போகிறன்'

என்று சித்தார்த்தருக்கு விளங்கவில்லை. அவன் அருகே சென்று " அப்பா...இன்னும் மாலைப்பொழுது ஆகவில்லை. அதற்குள் ஏன் இந்தக்கொடிய வெய்யிலில் இந்த ஆடுகளை யெல்லாம் ஓட்டிச் செல்கிருய்? " என்ருர்.

" ஐயா எங்கள் அரசர் நூறு செம்மறி ஆடுகளும் நூறு வெள்ளாடுகளும் இன்று இரவு நடைபெறும் யாகத்திற்குப் பலி கொடுக்கக் கொண்டுவரச் சொல்லி உத்தரவிட்டுள் ளார். நாங்கள் இன்னும் வெகுதூரம் போகவேண்டும். அதனுல்தான் இந்த வெய்யிலில் ஆடுகளைவிரட்டி அடித்துக் கொண்டு செல்கிருேம் " என்று சொல்லி அவன் வேகமாய் நடந்தான்,

கருணை உள்ளம் கொண்ட சித்தார்த்தர் மனம் வருந்தி " நானும் அந்த யாகசாலைக்கு வருகிறேன் " என்று சொல் லித் துள்ளும் மறியைச் சுமந்துகொண்டு நடந்தார்.

வெகு தூரத்தைக் கடந்துவந்த சித்தார்த்தர் மகதத்தின் தலைநகரான ராஜகிருகத்தை அடையும் போது மாலை நேர மாகிவிட்டது. ஆட்டுமந்தை எழுப்பிய புழுதி அவர் ஆடை எங்கும் படிந்திருந்தாலும் அவர் அன்பு தவழும் முகத்தில் நிலவிய சாந்தத்தின் பேரொளி அந்நகர மக்களைப் பெரும் வியப்பில் ஆழ்த்தியது. தவக்கோலத்துடன் கர கமலங் களில் காலொடிந்த ஆட்டுக் குட்டியைத் தாங்கிக்கொண்டு அவர் நடந்து வருவதைக் காண, வீட்டு வேலைகளில் ஈடு பட்டிருந்த பெண்கள் வேலைகளை அப்படியே போட்டுவிட்டு அவர் அன்பையும்—அவர் செயலையும் வியந்து மெய்மறந்து பார்த்து நின்றனர். அகன்ற வீதிகளையும் வான் அளாவும் மாட மாளிகைகளையும் தாண்டி யாகசாலையை வந்தடைந் தார் சித்தார்த்தர்.

அந்நகரின் மத்தியில் யாககுண்டம் அமைந்திருந்தது. அதைச்சுற்றி வேதியர்கள் வேதம் ஓதி நின்றனர். நாடாளும்

Q4:33
N57



மன்னன் **பிம்பிசாரன்** யாகசாலையின் நடுவேவந்து நின்றான். யாக குண்டத்தில் பசு நெய்யை வாரி வாரிக் கொட்டினர். எரியும் தீ வானைப் பற்றிடப் பாய்வதுபோல் மேலெழுந்து தாவியது.

அவ்வேளையில் வேதம் கற்ற வேதியர் ஒருவர் ஒரு கொழுத்த வெள்ளாட்டைக் கொண்டுவந்து நிறுத்தினார்.

அவர் அங்கு குழுமி இருந்த மக்களை நோக்கி "பெருங்குடி மக்களே! புவி ஆளும் அரசபெரும! இந் நாள் ஒரு திருநாள்! மறைகள் வகுத்த வழி முறை அறிந்து முறையுடன் செய்து முடிக்கும் இந்த யாகத்தில் நாம் இடும் இப் பெரும்பலி, செங்கோல் மன்னன் செய்த பழியும் பாவமும் நீங்க ஒருவழி. இந்த வாளால் ஆட்டின் கழுத்தை வெட்டித் துள்ளிப்பாயும் இரத்தத்தை வேள்வியில்கொட்டிப் பாயும் தீயின் வேட்கையைத் தணிப்போம். அப்போது அரசன் செய்த பாபங்கள் எல்லாம் நீங்கிப் பல்லாண்டு பாரில் வாழ வகையுண்டு. இதுவே வேதத்தின் விதி" என்று சொல்லி வாளை ஓங்கினார். அவ்வேளையில் எவ்வு யிரும் தன்னுயிர் போல் எண்ணி இரங்கும் சித்தார்த்தர் ஓடிவந்து "ஐயா...இந்தக் கொடிய செயலைச்செய்ய வேண் டாம் ஐயா. வாய்திறந்து பேசமுடியாத இந்த ஜீவனின் உயிரை வாங்குவதால் உங்களுக்கு என்ன நன்மை ஏற் படப்போகிறது? வாழும் உயிரை போக்கிவிட இந்த மண்ணில் எவர்க்கும்எளிதாகும். ஆனால் உயிரற்ற உடலை உயிரூட்டி எழுப்புவதென்பது அரசனாலும் ஆகாது. பிறப் பிலே உயிருக்கு ஏது பேதம்? ஒவ்வொருவரும் தன் உயிரைக் காத்துக்கொள்ள எவ்வளவு பாதுகாப்புகளைத் தேடிக்கொள்கின்றனர். சின்னஞ் சிறு எறும்பும் தான் உயிர் வாழ எவ்வளவு துன்பமுறுகின்றது. அப்படி இருக்க நம்மை அண்டிவாழும் ஓர் உயிரை யாகங்களின் பெயரால் கொலை செய்வது சரியா? நாம் செய்த பாவங்கள் இதனால்

109926

நம்மை விட்டு அகன்று விடுமா? நன்மை செய்தால் நன்மை விளையும். தீமை செய்தால் தீமைவிளையும். வினை விதைத்தவன் வினையறுப்பான். பாவத்தைப் போக்க உயிர்க் கொலை செய்து யாகத்தை வளர்ப்பது சரியல்ல.

"மனிதன் தான் செய்த பாவச் செயலின் பிடியிலிருந்து என்றும் தப்ப முடியாது; தப்பித்துக் கொள்ளக்கூடிய இடம், அகன்ற வானத்திலும் இல்லை; ஆழ் கடலிலும் இல்லை; உயர்ந்த மலைக் குகைகளிலும் இல்லை.

"பாவச் செயல் பழுத்துப் பலன் தராத வரையில் அதைத் தேன் என்று மூடன் நாடுகிறான். ஆனால் அது பழுத்து அதன் பலனை அனுபவிக்கும்போது அவன் துன்பத்தை அடைகிறான்.

"மனிதன் ஒரு தடவை பாவத்தைச் செய்து விட்டால், அதையே திரும்பத் திரும்பச் செய்யக்கூடாது. பாவம் பலனளிக்கத் தொடங்காதவரையில் அது இன்பகரமாய்த் தான் தோன்றும். ஆனால் அது பலனளிக்க ஆரம்பிக்கும் போதுதான் பாவி தன் பாவத்தின் தன்மையை உணர்கிறான். கையில் புண்ணில்லாதவன் நஞ்சைத் தொட்டாலும் அது அவனைப் பாதிப்பதில்லை. தீச்செயல் புரியாதவனைப் பாவம் பாதிப்பதில்லை,

"ஆதலால் இனியாவது தீவினை செய்வதை விட்டொழியுங்கள். ஆட்டின் கழுத்தை அறுத்துப் பொசுக்கி நீங்கள் ஆக்கிய யாகத்து அவியுணவை நீங்கள் சொல்லும் இறைவன் கை ஏந்தி வாங்கிப் புசிப்பாரா? இந்த உயிர்க் கொலையால் மன்னனின் பாவம் போக்கப் படுமென்றும், இந்த வேள்வியில் வெட்டப்படும் உயிர் சொர்க்கத்தை அடையுமென்றும் சொல்கிறீர்கள். அப்படியானால் என்னை பலியிட்டு சுவர்க்கத்திற்கு அனுப்புங்கள். நான் சுவர்க்கம்

போகிறேன். இந்த ஆட்டை அவிழ்த்து விடுங்கள்'' என்று கருணை வள்ளல் கூறி வேதியரின் கொலை வாளுக்குக் கீழே தன் தலையைத்தாழ்த்தினர்.

எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்த பிம்பிசார னின் உள்ளம் சிலிர்த்தது. உயிர் சிலிர்த்தது. மேனி யெல் லாம் புளகாங்கிதமுற்றது. தான் செய்த பிழை அறிந்து அண்ணலை வணங்கித் தன்னை மன்னிக்கும்படி வேண்டி ஞன், அன்றே ' ஊனை உண்பதும் உயிர்க்கொலை செய்வதும் இந்நாள் முதல் இந் நாட்டெல்லையில் இல்லாதொழிப்பேன் என்று சூளுரைத்தான்.

வேதியர்கள் வேள்வித்தீயை அழித்து ஞான வள்ளலின் பாதம் பணிந்து வணங்கி நின்றனர்.

சித்தார்த்தரும் தான் வந்த காரியம் முடிந்தது என்று எண்ணி அங்கிருந்து புறப்பட்டார்.

## சுஜாதை அளித்த அமுது

சித்தார்த்தர் காடு மேடெல்லாம் சுற்றி அலைந்தார். துன்பத்தின் மூலகாரணத்தை அவரால் கண்டறிய முடியவில்லை. முனிவர்கள் பலரை அணுகி அவர்கள் சொற் கேட்டு பல நாட்கள் அதன்படி நடந்தார். வாழ்வில் சூழும் துன்பத்தை விலக்கி இன்பத்தைக் காட்டும் வழியை ஒருவரும் கண்டறியாமல் வானத்தை வில்லாக வளைப்பது போல நீரிலும் நிலத்திலும் பலநாள் கடுந்தவம் செய்தபடி இருந்தனர்.

ஒரு நாள் சித்தார்த்தர் ஒரு தவயோகியை அணுகி "சுவாமி, தாங்கள் கண் மூடி மௌனியாய் எவ்வளவு காலம் இப்படிஇங்கேயே வீற்றிருக்கிறீர்கள்? தங்கள் உடலைப் பாதிக்குமேல் மண் மூடிக்கொண்டிருக்கிறதே! இன்னும் சில நாட்களில் தங்கள் உருவத்தையே மண்மேடிட்டு மறைத்துவிடும் போலிருக்கிறதே! சுவாமி தயை கூர்ந்து தாங்கள் எந்த லட்சியத்துக்காக இப்படி இரவு பகலாகக் கண் மூடி தியானிக்கிறீர்கள் என்பதைச் சொல்ல இயலுமானால் நானும் நீங்கள் செல்லும் புனிதப் பாதையை நோக்கி வரச்சித்தமாய் இருக்கிறேன்" என்றார்.

ஏதோ அரவம் கேட்டு யோகி கண் விழித்துச் சுற்றுமுற்றும் பார்த்தார். எதிரே இளஞ் சூரியன் உதித்ததுபோல் இளமையும் வனப்பும் மிக்க சித்தார்த்தர் நிற்பதைக் கண்டு

'மானிடப் பிறவியிலும் இவ்வளவு அழகும் ஒளியுமிக்க ஒருவர் உண்டா?' என்று எண்ணியபடி இந்த இளம் வாலிபன் தம்மிடம் என்னவேண்டி நிற்கிறுன் என்று அறிய "அப்பா உனக்கு என்ன வேண்டும்? நீ யாரைத்தேடி இந்தப் பயங்கரமான காட்டிற்கு வந்தாய்?" என்ருர்.

"சுவாமி...எனக்குப் பிறவா பேரின்பம் வேண்டும். பிறந்த மனிதர்கள் சாவை நோக்கிப் போகும்போது பயங்கரமான பிணி மூப்புக்கு ஆளாகித் தீர வேண்டி இருக்கிறதே! இந்த கொடுமையிலிருந்து மனிதன் மீள மார்க்கமில்லையா?"

"அப்பா...வாழ்க்கையே அதுதான்! மனித உடல் காற்றடைத்த பை. தூங்கும்போது நாம் விடும் மூச்சு சுழி மாறிப்போனுல் இந்த உடல் சடலமாகிப் போய்விடும். இந்த உடல் நிலையற்றது. அதனுல்தான் நீரிலும், நிலத்திலும், காற்றிலும், மழையிலும் இருந்து நாங்கள் உடலை வருத்தி உயர்வான இன்பத்தைக் காணத் தவம் செய்கிருேம்".

"சுவாமி...மனிதன் உயர்வான இன்பத்தை அடைய என்ன செய்ய வேண்டும்?"

"உடலை வருத்தவேண்டும். காற்றைப் புசிக்க வேண்டும். கண்ணை மூடி, கருத்தை ஒரே நிலையில் நிறுத்தி ஆண்டவனை நினைத்து அவன் நாமத்தை உச்சாடணம் செய்ய வேண்டும்".

"இந்த மாய உடல் மக்கி மடிந்தவுடன் மறு உலகில் சுவர்க்க வாழ்வு கிடைக்கும். எண்ணியதை எண்ணியபடி செய்யலாம். எங்கும் இன்பம்! எப்பொழுதும் இன்பம்! என்றும் இன்பம்! இதுதான் அமர வாழ்வு. இந்த வாழ்வை எட்டிப் பிடித்தவர்களுக்கு எட்டிக்காயும் இனிக்கும். துன்பம்

என்ற இருளே இல்லாத ஓர் ஒளிமயமான உலகம் அது. அதை அடைவதுதான் எங்கள் லட்சியம்".

சித்தார்த்தர், முனிவர் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். "உலக வாழ்வை நீத்த பின் ஓர் உன்னத உலகம்! அந்த சொர்க்க வாழ்வை அடைய பயங்கரமான வழி! இந்த அற்ப சுகத்திற்கு இவ்வளவு துன்பமா? இதுவா என் லட்சியம்? இல்லை? இல்லை! பிறப்புக்கும் இறப்புக்கும் ஒரு முடிவு காணவேண்டும்..."

"என்ன குழந்தாய் யோசிக்கிருய்?"

"சுவாமி...நான் சுவர்க்கவாழ்வை விரும்பி வரவில்லை. அதைவிட இன்பமான வாழ்வை என் அன்பு மனைவியிடம் நான் அடைந்தவன். பிறப்புக்கும் இறப்புக்கும்—துயர் நிறைந்த உலக வாழ்க்கைக்கும் முடிவு காண வேண்டுமென்பதே என் குறிக்கோள். அதற்கு ஏதும் வழி இருந்தால் சொல்லுங்கள்" என்று பணிவுடன் அந்தத் தவயோகியை வணங்கி நின்ருர்.

அவர் "வாழ்வே துன்பமயமானது. அதிலிருந்து மனிதன் இன்பமடைய ஒரே வழி சுவர்க்கத்தை அடைதல் தான்" என்ருர்.

சித்தார்த்தர் அதற்குமேல் அங்கு நில்லாமல் இந்த நிலையில்லா வாழ்வில் நித்தியானந்தத்தை நாடி கால்போன போக்கில் போய்க்கொண்டே இருந்தார். வழி நெடுக அறிவு முதிர்ந்த பெரியோர்களையும் சிறந்த தவயோகிகளையும் கண்டு உயிர்களின் துன்பத்தை நீக்கும் வழி என்னவென்று கேட்டு, அவர்களுடன் விவாதித்து, தம் மனக்குறைவு நிறைவுபட சரியான விடை கிடைக்குமா என்றுப்பார்த்தார்.

ஒருவரும் சரியான விடையளித்து அவர் மனக் குறைவை நிறைவு படுத்தவில்லை. எல்லோரும் இந்த உடலைப் பொய்யென்றும், வாழ்வை மாயை என்றும் பேசி உடலை வதைத்துத் துன்பப்படுத்தினர். வாழ்வில் உள்ள தீமைகளை ஆராய்ந்து அவைகளை நீக்குவதற்கு வழிகாணது எங்கோ இருக்கும் சுவர்க்கத்தை அடைய சித்தார்த்தரின் மனம் ஒப்பவில்லை. அதனால் அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு தன் லட்சியத்தை நாடி அவ்விடத்தை விட்டு வெளியேறினர்.

பிறகு ஆலாரகாலம் என்ற முனிவரிடம் சென்று யோக முறையைக் கற்றுணர்ந்து பலநாள் அதன்படி ஒழுகினர். அதிலும் அவர் உண்மையைக் காணது அவரையும் விட்டு நீங்கி உருவேல வனத்தை அடைந்தார். அங்கே தவமேற் கொண்டிருந்த ஐந்து முனிவர்களை அடைந்து அவர்களுடன் அளவளாவித் தாமும் தவமேற்கொண்டு உணவு முதலியவற்றைத் துறந்தார். நாட்கள் பல ஓடி மறைந்தன. உடலை வாட்டுவதால் உள்ளொளி பெருகி உவப்பிலா ஆனந்தம் பெருகும் என்று சொன்னர்கள். அதன்படி பலநாள் பட்டினி கிடந்தார். உடல் மெலிந்தார். பலநாள் தளர்ந்த உடலுடன் இருந்தார். ஒருநாள் தன் உணர்வற்று மயங்கிக் கீழே விழுந்தார். சிறிதுநேரம் சென்றபின் தெளிந்த நிலையை அடைந்தார்.

'ஆசைகளை அடக்கிப் பூரண ஞானம் பெறுவதற்கு உடலை வருத்துவதால் மட்டும் பயனில்லை. அதனல் உடல் வலிமை இழந்து-பசியாலும், தாகத்தாலும் உடல் நலம் குன்றி-மனபலமும் பாதிக்கப்பட்டு விடுகிறது. மனபலம் இல்லாத நிலையில் நான் எப்படி பூரண ஞானத்தைப் பெற முடியும்? அதனல் இன்று முதல் உண்ணு நோன்பை நான் கைவிட வேண்டி இருக்கிறது. இந்த உயிர் வாழ என்

உடல் அவசியம். உடல் உயிரின் கூடு. கூட்டைச் சிதைத்து விட்டு உயிர் எப்படி வாழமுடியும்?' என்று தன் மனதுக்குள் தீர்மானித்துக் கொண்ட சித்தார்த்தர் பட்டினித் தவத்தைக் கைவிட்டு உணவை உண்பதென்று முடிவுசெய்தார்.

பிறகு தளர்ந்த நடையுடன் மெல்லமெல்ல **நைரஞ்சரை** என்னும் ஆற்றின் கரையையடைந்து அங்குள்ள ஒரு அரச மரத்தடியில் மிகுந்தக் களைப்புடன் அமர்ந்தார்.

இருபத்தெட்டு நாட்கள் இரவும் பகலும் ஓய்வு ஒழி வின்றி உள்ளத்தின் உறுதி குலையாமல் உண்மையை ஆராய்ந்தறிந்துகொண்டே இருந்தார்.

அவ்வேளையில் அழகே உருவான **சுஜாதை** என்ற பெண்மணி அங்கே வந்தாள்.

அவள் ஆயர்குலத்தில் பிறந்து வளர்ந்தவள். நிறைந்த செல்வமும், வளமான நிலங்களும் உடைய நற்குடிப் பிறந்த தலைவன் ஒருவனைத் துணைவனுகக் கொண்டிருந்தாள்.

அவள் அன்பும், அறிவும், பண்பும் உள்ளவள். எளி மையும், பொறுமையும், இரக்கமும் உடையவள். எவரை யும் இன்முகத்தோடு நல்லுரைகூறி வரவேற்பவள்.

நீண்டகாலமாக அவளுக்கு மகப்பேறில்லாதது ஒரு பெருங்குறையாக இருந்தது. அதனுல் அவள் **அஜபால** மரத்தடியில் இருக்கும் தெய்வத்திற்குப் பாலமுது வழங்குவ தாக பிரார்த்தனை செய்துகொண்டாள். அதன்பின் அவ ளுக்கு ஆண் மகவொன்று பிறந்தது. அவள் பெறற்கரும் பேறு பெற்றதனுல் அவள் வாழ்வே இனித்திட தான் வணங் கும் தெய்வத்திற்குப் பால் அமுது தயாரித்துக்கொண்டிருந்

தாள். அப்பொழுது தன் பணிப்பெண் புண்ணியை என்பவளை அழைத்து அஜபால மரத்தினடியில் கூட்டி மெழுகி சுத்தம்செய்து கோலமிட்டு வரும்படி பணித்தாள். அவளும் விருப்புடன் அஜபால மரத்தருகில் சென்றாள். அங்கே ஆல மரத்தின் அடியில் சித்தார்த்தர் வீற்றிருப்பதைக் கண்டு திடுக்கிட்டு நின்றாள். அவர் முகத்தில் நிலவிய சாந்தமும் கருணையும் கண்டு வியப்படைந்து அஜபால மரத்தடியில் கோவில் கொண்டிருக்கும் தெய்வம் இதுவன்றோ என்று எண்ணி அப்பேதை, சுஜாதையிடம் சொல்ல ஓடோடியும் வந்தாள். அவ்வேளையில் அழகி சுஜாதை பாலமுதைப் பக்குவமாய்த் தயாரித்துப் பாத்திரத்தில் எடுத்துக்கொண்டு அன்னமென மெல்ல நடந்துவந்தாள். எதிரே வந்த பணிப் பெண்ணின் பரபரப்பையும், பார்க்கும் விழிகளிலே தெரித் தோடும் ஆச்சர்ய பாவத்தையும் கண்டு "என்ன?... என்ன?... " என்று வினவினாள்.

"அம்மா... அம்மா... நான் ஒரு அதிசயம் கண்டேன்! மலர்கள் மலர்ந்து மழை எனப்பொழியும் மரத்தடியில் ஜோதி ஒளி வீச மௌனமாய் மலர் விழி மூடி, முழங்கை மடக்கி முட்டில் அமர்த்தி அருளே உருவாய் சாந்தம் நிலவிடும் காணாத கடவுளைக் கண்டேன் அம்மா" என்று சொன்னாள் புண்ணியை.

அவள் கொண்ட பரபரப்பையும் சொன்ன மொழிகளையும் கேட்ட சுஜாதையின் நெஞ்சில் அன்பு நிறைந்தது. ஆவல்மீதூர வனத்தை நோக்கி வேகமாக நடந்தாள்.

மரத்தின் அடியில் வையகம் வாழ மாதவம் செய்யும் வள்ளலைக் கண்டாள். வாடும் உயிர் ஒன்று வகையறியாது தவிப்பதைக் கண்டாள். உடல் தளர்ச்சியுற்று வாடி இருப்பதைக் கண்டு வருந்தினாள். அருள் ஒழுகும் அவள்

சிந்தை சித்தார்த்தருக்கு இரங்கியது. பொற்கலத்தில் பொங்கி எடுத்து வந்த பாற் சோற்றைப் பிசைந்தெடுத்து "அண்ணலே, அடியாள் அளிக்கும் இந்த இன்னமுதை உண்டு களைப்பை நீக்குங்கள்" என்ருள்.

சித்தார்த்தரின் கண் மலர்கள் மெல்லத் திறந்தன. எதிரே பதுமைபோல் ஓர் இளம்பெண் தங்கப் பாத்திரத்தில் பால்சோறு நிரம்ப அதை எடுத்து அவர் வாய் அருகே ஏந்தியபடியே இருப்பதைக் கண்ட சித்தார்த்தர் "தாயே! தங்களுக்கு என்ன வேண்டும்? நீங்கள் யார்?" என்ருர். அவரால் பேச முடியவில்லை. பல நாள் பட்டினியால் காதடைத்துக் கண் ஒளியும் மங்கிற்று.

"அண்ணலே...! நான் பக்கத்தே உள்ள கிராமத்தில் வசிப்பவள். என் பெயர் சுஜாதை. நான் வணங்கும் தெய்வத்துக்குப் பாற்சோறு படைக்க வரும்போது தங்களைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது. பசியால் களைத்திருக்கும் தங்களைக் கண்டு என் நெஞ்சம் இளகுகிறது. இப்பாலமுதைச் சாப்பிடுங்கள். அதையே என் தெய்வமும் விரும்பி ஏற்கும்" என்று கூறிப் பாற்சோற்றை எடுத்து அவருக்கு ஊட்டினுள். பொலிவு குன்றி வாடிவதங்கியிருந்த அவர் வதனம் அவர் உண்ட உணவால் அழகுடன் திகழ்ந்தது. இளைத்து வருந்திய களைப்பெல்லாம் பறந்தோடிவிட்டது.

ஊக்கமும் ஒளியும் தோன்ற அவர் சுஜாதையை நோக்கி "பெண்ணே! வேளை அறிந்து நீ கொண்டு வந்து உபசரித்த இவ்வுணவு ஏது? இதை எப்படி இங்கு கொண்டு வந்தாய்?" என்று வினவினுர்.

"அண்ணலே எனக்கு நெடுநாட்களாய் குழந்தைப் பேறில்லாமல் இருந்தது. அதற்காக நாங்கள் வணங்கும்

குல தெய்வத்திற்கு 'குழந்தை பிறந்தால் பாலமுது கொண்டு வந்து படைப்பதாக' வேண்டிக் கொண்டோம். எனக்கு ஒரு ஆண் மகவு பிறந்தது. அம்மகிழ்ச்சியினுல் இன்று என் நேர்த்திக் கடனை செய்வதற்கு இங்கு வந்தேன். அவ்வேளை யில் தங்களின் வாடிய மேனியும் தளர்ந்த நிலையும் கண்டு பாலமுதைத் தங்களுக் களித்தேன் '' என்ருள்.

'' பெண்ணே ! உன் செய்கை மிக்க அன்புடையது! உன் அன்பு வளர்க! உன் மைந்தன் இம்மாநிலம் மீது வருந்தி வாடாது நீண்டநாள் இன்பமுடன் வாழ்க !'' என்று வாழ்த்தி, ''நீ பெற்ற மதலையும், நீ வாழும் வாழ்க்கையும் உனக்கு உண்மையாகவே இன்பம் பயப்பனவாய் இருக் கின்றதா ?'' என்ருர்.

இதனைக் கேட்ட சுஜாதை '' அண்ணலே! நான் சிற்றறிவு படைத்தவள். என் வாழ்வு இப்பரந்த உலகில் மிகச் சிறியது. என் செல்வனின் சிரிப்பொலியும், அன்பு நிறைந்த கணவரின் கருணை உள்ளமும், என் வாழ்வை வள மிக்கதாய், வாடாமலர்ச் சோலையாய், வற்ருத ஜீவநதி பாயும் வளமான நிலமாய் செழிப்புடன் எழில் குலுங்க விளங்கச் செய்கின்றன.

''நான் தினந்தோறும் காலையில் எழுந்து கணவரை வணங்கிவிட்டு வேலைகளை ஒழுங்காகச் செய்வேன். என் கணவர் விரும்பி உண்ணும் உணவை வகை வகையாய்ச் செய்து தருவேன். அவரும் தன் அலுவல்களை முடித்துக் கொண்டு நான் அன்புடன் சமைத்து வைத்த அறுசுவை உணவை உண்டு சற்று களைப்பாறுவார். அவர் இன்பமுடன் சற்று கண் அயரும் வரை இனிய இசை பாடி விசிறி எடுத்து வீசுவேன். மாலைக்கதிரோனும் மறையும் வேளை

வரும். கணவர் இரவு உண்டுகளித்திட இதமான உணவு தயாரிப்பேன். என் கணவர் அன்பு நிறைந்த நண்பர் பல ரோடு நல்லுரையாடுவார். நானும் என் தோழிகளுடன் சில நேரம் பேசி மகிழ்வேன். இத்தனை இன்பம் இருக்கும் வாழ்வில், அண்ணலே! தாங்கொணுத் துயரமும் தரணிமீது உண்டென்பதை அறிவேன்.

"எப்பொழுதும் எங்கும் நாம் நன்மை செய்யவேண்டும். நன்மை விதைத்தால் நன்மையே விளையும்; தீமை விதைத்தால் தீமையே விளையும். கரும்பில் வேம்பு காய்ப்பதில்லை. வேம்பில் கரும்பும் விளைவதில்லை. வெறுப்பால் நிறைவது வீண் பகையே. அன்பால் அனைவரும் நண்பர் ஆகலாம். பொறுமையால் இப்புவி மீது என்றும் அமைதியுடன் வாழலாம்.

"இருந்தும் வாழ்வில் சூழும் துயர இருளை நான் நன்குணர்வேன். எனக்கு என் கணவரே கண்கண்ட தெய்வம். என் இன்பமெல்லாம் பெற்ற மகனைப் பேணி வளர்த்து சான்ருேன் ஆக்குவதே.

"ஆனுல் உலகில் உண்ண உணவும் உடுக்கத் துணியும் இல்லாமல் துன்பப்படுவோரும், நோயில் விழுந்து நொந்து நொந்து உடல் புண்ணுகிப் பாயில் கிடந்து பரதவிப்போரும், தீய வழியில் புகுந்து பொல்லா பாதகராகிப் பழிபுரிவோரும் இவ்வுலகில் உண்டென்ற உண்மையை அறிவேன்.

"என் வாழ்வு என்றும் இனிய வாழ்வாம். நன்மையே தினமும் நலமுடன் செய்வேன். விதிவழி எவ்விதமாயினும் வருவதெல்லாம் நன்மை பயக்குமென்று நம்பியே வாழ்

வேன். இதுவே என் வாழ்வின் கதை" என்று சுஜாதை சொல்லி முடித்தாள்.

சுஜாதையின் வாழ்வின் அனுபவமொழிகளைக் கேட்ட சித்தார்த்தர் அவளை மிகவும் போற்றிப் புகழ்ந்து "பெண்ணே! நீ சிறந்த அறிவுள்ள மேதைகளின் நீதி நெறி களை வழுவாது உன் வாழ்க்கையில் கடைப்பிடித்து வருவது மிகச் சிறப்புடையது! பெண்களுக்குள்ள கடமைகளை நீ நன்கு உணர்ந்திருக்கின்றனை. நீயும் நின்குலக் கொழுந்தும் நின் துணைவருடன் நீண்டநாள் இனிது வாழ்தல்வேண்டும்!" என்று ஆசி கூறி அதன் பிறகு தான் யார் என்பதையும் விளக்கி அவளுடைய எண்ணம் நிறைவேறியதைப் போலத் தன் எண்ணமும் நிறைவேற வேண்டுமென்று வாழ்த்தி யருள வேண்டினர்.

சுஜாதையும் மிக்க மகிழ்ச்சியடைந்து அவருடைய எண்ணம் நிறைவேறிக் கைகூட வேண்டுமென்று வாழ்த்தி, வணங்கி, அவரிடம் விடைபெற்றுச் சென்றாள்.

## மெய்ப்பொருள் கண்ட மகாத்மா

சித்தார்த்தர் சுஜாதை அளித்த உணவை உண்டு புதுபலம் பெற்றவராய்த் திகழ்ந்தார்.

எண்ணிலாக் காலம் காடுமேடு சுற்றி, உண்ணுமல் உறங்காமல், இரவு பகலும் இடை விடாமல் தீவிரமாகச் செய்த தவத்தால் வாடி இளைத்து வருந்திய களைப்பெல் லாம் சுஜாதை அளித்த உணவை உண்டதனுல் நீங்கி தெளிந்த நிலையை அடைந்தார்.

பாலைவனத்தில் பறந்து பறந்து தளர்ந்த பறவை ஓர் தடாகத்தைக் கண்டு நீரைக்குடித்து குதூகலிப்பதைப் போல பாலமுதுண்ட அண்ணலின் முகமும் அழகுடன் பொலிந்தது.

கடைசியாக அவருடன் வாழ்ந்துவந்த ஐந்து தவ யோகிகளும் இவர் உணவு உண்பதைக்கண்டு தவ முறையி லிருந்து விலகி உணவை உட்கொண்டு விட்டார் என்று கூறி அவர் மேல் வெறுப்புற்று, அவரைவிட்டு விலகி வேறிடம் சென்றுவிட்டனர். தன்னந்தனியே விடப்பட்ட சித்தார்த்தர் இதனுல் சித்தம் கலங்கவில்லை. தன்னைத்தானே நம்பி தன் அறிவையே துணையாகக்கொண்டு தன்லட்சியம் சித்தி யடையும் வரை இந்த இடத்தைவிட்டு அகலுவதில்லை என்ற முடிவுடன் அரசமரத்தின் அடியில் அமர்ந்துவிட்டார்.

அன்று மதி நிறைந்த நன்னுள். சித்தார்த்தரின் சித்தம் ஒரே நிலையில் நிலைத்திருந்தது. வெகு காலமாக

அவர் தேடி அலைந்த மெய்ப்பொருளின் கருப்பொருளை அவ் வேளையில் கண்டறிந்தார்.

"பிறப்புக்கும் இறப்புக்கும் காரணமாய் இருப்பது துக்கம். சகல துக்கங்களுக்கும் காரணமாய் இருப்பது ஆசை. அந்த ஆசையை ஒழித்து விடுவதே துக்க நிவாரணம். துக்க நிவாரண மார்க்கங்கள் எட்டு. இந்த எட்டு வகை மார்க்கங்களையும் மன உறுதியுடன் கைக் கொள்பவர்கள் துயரங்களை விட்டொழித்து இன்பமடையலாம்."

இப்படி சிந்தனை அலைகள் ஒவ்வொன்றுய் அவர் சித்தத்தில் மோதி எழுந்தன.

எழுத்தால் எழுத முடியாத—வண்ணத்தால் நிறைவு படுத்த முடியாத புதிய ஒளி அவர் திருமுகத்தில் திகழ்ந்தது. அவர் பூர்ண ஞானம்பெற்ற புனிதராய் விளங்கினர். அறியாமை இருளிலே அழுந்திக்கிடந்த மனிதனுக்கு மெய்ப்பொருள்கண்ட சித்தார்த்தர் மகாத்மா புத்தராகி அறிவொளி பரப்பி அறியாமை இருளைப் போக்கினர்.

அவர் அகங்காரத்தை அழித்ததினுல் அவர் உடல் பொன் ஒளிவீசித் திகழ்ந்தது. ஆசையை அழித்த அவர் உள்ளம் சாந்தி நிலையமாக விளங்கியது.

'எவன் அவாவை அழித்து, எதையும் தனக்கென்று தேடிவைத்துக் கொள்ளாமல் இருக்கிருனே, எவன் சொற்களையும் அவற்றின் பொருள்களையும் உணரும் சக்தியுள்ளவனே, எவன் எழுத்துக்கள் முன்பின்னுக இருக்க வேண்டிய முறையைத் தெரிந்துள்ளானே, அவனே மகா ஞானி; அவனே மகாத்மா, இந்தச் சடலமே அவன் எடுக்கும் கடைசி உடம்பாகும்,' என்று எண்ணிய புத்தர்

தன்னைவிட்டு ஓடிய ஐந்து தவயோகிகளையும் கண்டு அவர்களிடம் தான் கண்ட உண்மை மார்க்கத்தை உரைப்பதற்காகச் சென்றார்.

இவர் செல்லும் வழியில் **உபாகர்** என்ற ஜைனர் இவரைச் சந்தித்தார். அவர் வேதியர். இவரோ வாலிப ஞானியர். புத்தரின் முகத்தில் வீசும் அறிவொளி அவருக்குத் திகைப்பேற்றி நிறுத்தியது. அப்போது அவர் மகாத்மா புத்தரை நோக்கி "தங்களுடைய குரு யார்?" என்று கேட்டார்.

அதற்கு புத்தர்பிரான் "நான் யாவற்றையும் வென்றவன்; யாவற்றையும் அறிந்தவன்; வாழ்வின் நிலைகள் யாவற்றினும் ஒட்டுப் பற்றில்லாதவன்; எல்லாவற்றையும் நான் துறந்து அவாவை அழித்ததால் நான் முக்தி அடைந்தவன்; எல்லாவற்றையும் நானே கற்றுக்கொண்டபின் எவரை என் குரு வென்று காட்டுவேன்?" என்று சொல்லி அங்கிருந்து புறப்பட்டார்.

பிறகு ஐந்து தவயோகிகளையும் காசிக்கு அருகே உள்ள **சாரநாத்** என்ற நகரில் கண்டு அவர்களிடம் உடலை வருத்திக் கடுமையான தவங்கள் செய்யாமலும், உடல் இன்பங்களில் ஆழ்ந்துவிடாமலும் விடுதலைக்குரிய நடுநிலை வழியைத் தாம் கண்டுகொண்ட விதத்தை எடுத்துக்கூறி அவர்களின் அறியாமையைப் போக்கினார்.

ஐந்து தவயோகிகளும் ஆரம்பத்தில் அவர் சொன்ன உபதேசங்களை அலட்சியப்படுத்தினர். பிறகு அவருடைய நிதானமான அறிவு விளக்கத்தைக் கேட்டுக் கொஞ்சங் கொஞ்சமாக மனம் மாறி கருத்தோடு செவிமடுக்க ஆரம்பித்தனர்.

"பகைமை கொள்வதனுல் பகைமை ஒருபோதும் நீங்காது; நட்பினுல்தான் பகைமை நீங்கும்.நாம் சுகமாக வாழ்வோம். நம்மை பகைப்பவர்களிடம் பகைமை கொள்ள மாட்டோம்; பகைப்பவர்களின் நடுவிலும் பகைமை இல்லாமல் வாழ்வோம். மனத்தை அழுக்கடையச் செய்யும் ஹிம்சை, திருட்டு, விபசாரம், பொய்மை, புறங்கூறல், கடுமையான பேச்சு, வீண்வாதம், கோபம், துரோகம், பொய்க்கொள்கை ஆகிய பத்தையும் முற்றும் நீக்கி, உண்மையைக் கடைப்பிடித்து, அனைவருக்கும் உதவிபுரிந்து வாழ்வோம்."

"தவயோகிகளே! துக்க நீக்கத்துக்குரிய மார்க்கமான நற்காட்சி, நல்லுறுதி, நல்வாக்கு, நற்செய்கை, நல்வாழ்க்கை நல்லூக்கம், நற்கடைப்பிடி, நல்லமைதி இவைகளைத் துணையாகக்கொண்டு துன்பத்தை விட்டொழியுங்கள்."

இப்படிப் படிப்படியாய் அறிவின் விளக்கமான பொன் உரைகளை எடுத்துச் சொன்னதைக் கேட்ட ஐவரில் ஒருவரான **கௌண்டின்யர்** என்ற முதியவர் புத்தருடன் சேர்ந்து அற உரைகளைப் பரப்பினர். அதன்பின் நால்வரும் புத்தருடன் சேர்ந்துவிட்டனர். இந்த ஐவரையும் துணையாகக் கொண்டு புத்தர் பல திசைகளிலும் சத்தியத்தையும் தருமத்தையும் பரப்பினர்.

புத்தர் ஞானமடைந்த பிறகு கால் நடையாகவே அரசர், அமைச்சர், பணியாள், பார்ப்பனர், பள்ளர், தோட்டி எல்லோரிடமும் சென்று அறம் வளர்த்து மனிதனுடைய மேன்மையான குணங்கள் மேலோங்கி இருக்கும்படி செய்தார். பிறப்பினுல் ஒருவன் தீண்டப்படாதவனுகவும், ஒருவன் உயர்ந்தவனுகவும் ஆக முடியாது. ஆனுல் அவனவன் செய்கைகளினுலும், ஒழுக்கத்தினுலும் சிறந்த மனிதனுய் மேன்மை யடைய முடியும் என்பது அவர்

கொள்கை. பெண்கள் சமூகத்தில் தாழ்த்தப்பட்ட நிலையில் இருப்பதைக்கண்ட புத்தர் அவர்களுக்கும் சரிசமமான நிலையை அளித்தார்.

அவர் உபதேசம் முழுவதும் அன்புமயமானது; அருள் மயமானது. மரம் தீப்பற்றி எரியும்போது புள்ளினங்கள் அதன் மீது குடியிருக்க முடியாது. ஆசைகளால் ஏற்படும் சித்த விகாரமுள்ள இடத்தில் சத்தியம் தங்கி இருக்காது, இந்த உண்மையைத் துறவிகளிடம் மட்டும் உபதேசிக்க வில்லை. இல்வாழ்வோர் ஒவ்வொருவருக்கும் அவசிய மென்றார்.

"துறவிகளிலே வழுக்கி விழுந்து தவறியவரும் உண்டு. இல்வாழ்வோரிலே முனிவர்கள் நிலைக்கு உயர்ந்தோரும் உண்டு."

"நல்லொழுக்கத்தாலும் ஆராய்ச்சி அறிவாலுமே மனிதன் உண்மையை அடைய முடியும். உலகப் பொருள் களின் போலித்தன்மையைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சிந்தித்து வாழ்க்கையின் நிலையற்ற தன் மையை உணர்ந்து கொள்ளவேண்டும். உள்ளத்தை மேல் நிலைக்குஉயர்த்தி உறுதியுடன் உண்மையை நாட வேண்டும்."

இப்படி அறிவொளி பரப்பிய ஞானவள்ளலைப் பலர் சந்தித்து நல்லுபதேசம் பெற்றுச் சென்றனர்.

ஒரு காலத்தில் ***கிருசா கௌதமி** என்ற மங்கை ஒருத்தி தன் அன்புச்செல்வம் தளர் நடைபோடும் பருவத்தில்

---

*கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் ஆசியஜோதி என்ற கவிதை நூலில் சுஜாதை மகவை இழந்து புத்தரிடம்

இறந்து போனமையால் உள்ளம் நொந்து, அழுது புலம்பி, அன்போடு அக்குழந்தையை மார்போடு அணைத்து கொண்டு புத்தரிடம் வந்தாள். அவனைப் பெற்ற வயிறு பற்றி எறிந்தது.

"ஐயா, நான் பெற்று வளர்த்த பிள்ளை பேச்சு மூச் சற்று கிடக்கிறது. இந்த பச்சைப் பசுங்கிளியைப் பாருங்கள். நான் ஒருவிதப் பிழையும் செய்யாமல் வாழ்ந்து வந்தேன். என் தலையில் இப்படி இடிவிழுந்து விட்டதே! இனி நான் என்ன செய்வேன்!" என்று புலம்பி அழுதாள்.

வாழ்வின் கருப்பொருளைக் கண்ட புத்தர்பிரான் அவளை நோக்கி, "தாயே நின் மனக்கவலை ஒழித்திட நல்ல மருந்தளிப்பேன். குழந்தையையும் எழுப்பி ஓடி விளையாட விடுவேன். ஆனால் நீ ஒரு காரியம் செய்யவேண்டும். யாரும் சாகாத வீட்டிலிருந்து கொஞ்சம் கடுகு வாங்கி வரவேண்டும். இதை நீ பக்கத்தில் உள்ள வீடுகளில் சென்று விசாரித்து வாங்கிவந்தால் உன் துயரம் விலகி உன் குழந்தையும் உயிர்பெற்று எழுவான்" என்றார்.

இதைக் கேட்டவள் குழந்தையை ஏந்தி அணைத்தபடி ஊரெங்கும் ஒவ்வொரு வீடாக ஏறி இறங்கினாள். அவள்

---

முறையிட்டு அரற்றுவதாக எழுதியுள்ளார்கள். டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் புத்த சரித்திரம் என்ற நூலில் கிருசா கௌதமி என்ற பெண்ணை அறிமுகப்படுத்துகிறார். சுஜாதை நல்ல அறிவும் உயர்ந்த பண்பும் உடைய நங்கையாக யாவரும் குறிப்பிட்டு எழுதியுள்ளதால் அவள் அறிவுத் திறன் சிறந்ததாகக் கருதப்படுகிறது. அதனால் அவளுக்குத் புத்தர்பிரான் அறிவுரை கூறுவது அவ்வளவு சிறப்பல்ல என்ற காரணத்தால் கிருசா கௌதமியையே மகவை இழந்து தவிக்கும் தாயாக நான் இங்கு சித்தரித்துள்ளேன்.

சோகக் கதையைக் கேட்டு மனமிரங்கிக் கை நிறையக் கடுகை அள்ளிக்கொடுத்திட வந்தனர் பலர். அவளும் அவர்கள் கொடுக்கும் கடுகை வாங்குவதற்கு முன் "தாயே! உங்கள் வீட்டில் தந்தை, தாய், தமக்கை, மைந்தர் எவரும் இறந்ததுண்டா ?" என்று கேட்டாள்.

அன்பு நிறைந்த அம்மங்கையர் அவள் நிலையைக் கண்டு இரங்கினர். "அம்மா... சாகாத வீடென்று ஒன்று உண்டா? என் வீட்டில் தந்தை இறந்து பலகாலமாகி விட்டது! தாய் இறந்ததே எனக்குத் தெரியாது" என்றனள் ஒருத்தி.

அவள் அத்துடன் நில்லாமல் ஒவ்வொரு வீட்டிலும் சென்று விசாரித்தபொழுது 'என் பிள்ளை இறந்தானென்றும், என் தாய் தந்தையர் இறந்தனரென்றும், என் மனைவி இறந்தாளென்றும், என் கணவர் இறந்தாரென்றும், இப்படியே பலவிதமாய்' ஒவ்வொருவரும் கூறினர்.

இவற்றையெல்லாம் கேட்ட கிருசாகௌதமி பின்னும் பல முறை அலைந்தும் ஒருவரும் இறவாத வீடொன்றும் எங்கும் இல்லாததனால் பிறந்தோர் யாவரும் இறப்பது உறுதி என்பதை அறிந்து புத்திரசோகம் தணிந்து மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு பிணத்தை மயானத்தில் சேர்த்து, செய்ய வேண்டிய கருமங்களைச் செய்து முடித்து, புத்தரிடம் வந்து வணங்கி நின்றாள்.

புத்தர், மகவை இழந்தவளின் மனத் தெளிவைக் கண்டு "அம்மா இந்த உலக இயற்கையை யாராலும் மாற்ற இயலாது. இறந்துபோன உன் மைந்தனுக்காக

மனம் தளரவேண்டாம். இவ்வுலகில் ஒன்றும் நிலையுள்ள தன்று" என்று அறிவுரை கூறி வாழ்வின் மெய்நிலையை அவளுக்கு நன்கு எடுத்து விளக்கிப் போதித்தார்.

அவளும் அதனைக் கேட்டு மனமாசு அகற்றி பௌத் தத்தில் சேர்ந்து பிறவிப் பெருங்கடலை நீந்துதற்குரிய வழி நின்று ஒழுகி வரலானாள்.

## சத்தியமே வெற்றி

மகாத்மா புத்தர் மரணப் படுக்கையில் இருந்தார். அருகில் சோகமே உருவாக நின்ற ஆனந்தரைப் பார்த்து "ஆனந்தா! பழுத்தக்கனி மரக்கிளையில் எத்தனைநாள் வாழ முடியும்? மூப்படைந்தவனும் உலகில் எத்தனை நாள் வாழ முடியும்? இயற்கை விதித்த விதி, இரண்டிற்கும் ஒரு நாள் அழிவு என்பதே! ஏன் வீணாக மனங்கலங்குகிறாய்? நீண்ட காலமாக என்னுடனேயே பழகிய நீ சிறுவனைப் போல விம்மி விம்மி அழலாமா! மரணம், மூப்பு, பிணி இந்த மூன்றையும் வென்றபிறகு அது என்னை அணுகுவதைக் கண்டு நீ நெஞ்சம் கலங்கித் துயர்ப்படுவது சரியல்ல! தைரியமாய் இரு. இவ்வுலகில் ஒன்றும் நிலையுள்ளதன்று; மிகவும் நெருங்கியுள்ள ஒவ்வொரு பொருளினின்றும் நாம் நீங்கவேண்டும். நான் அறிந்தவற்றை யெல்லாம் நீ அறிந்து கொண்டிருக்கிறாய். அதனால் இனி நான் செய்ய வேண்டிய பணிகளையெல்லாம் உலகுக்கு நீ உணர்த்த வேண்டும். இங்கு கூடியுள்ள மல்லர்களிடம் போய் எனது கடைசிக்காலம் நெருங்கிக் கொண்டிருப்பதை அவர்களிடம் தெரிவி" என்றார்.

ஆனந்தர் அழுதுகொண்டே மல்லர்களிடம் இந்தத் துக்கச் செய்தியைச் சொல்லவந்தார்.

* * *

புத்தருக்கு அப்போது வயது எண்பது.

அவர் கால நிலைக்கேற்ப சோலைகளிலும், விகாரங் களிலும் சீடர்களுடன் தங்கி இருந்து மக்கள் எல்லாம் ஒன்றுகூடி அவர் நன்னெறிகளை கேட்டு ஒழுகும்படி பல நாள் சலிப்பின்றி நல்மொழிகளை நயமுடன் சொல்லி எண் ணற்ற மக்களின் உள்ளங்களை கவர்ந்தார்.

அறவழி காட்டி அகிலமே போற்ற ஊர்கள் தோறும் சென்று எல்லோரும் எப்பொழுதும் கொல்லாமையையே மேற்கொண்டு ஒழுக வேண்டுமென்ருர். மதியைக் கெடுத்து மயக்கத்தைக் கொடுக்கும் கட்குடியை ஒழிக்க மதுவை மாந்திக் களிப்பவர்களைக் கண்டு அதன் தீதை எடுத்துக்காட்டினர். பிறர் மனைவியை விழைவோரிடமும், வேசியரின் நட்பை நாடுவோரிடமும் சென்று அவர்கள் காலத்தைக் கயமைத் தன்மையுடன் கழிப்பதைத் தடுத்து அவர்களுக்கு நல்வழி காட்டினர். பொய்மையே கூறிவந்த வர்களை மெய்மையையே கூறும்படிசெய்தார். திருடிப்பிழைப் பதையே வாழ்வாகக் கொண்டவர்களை அத்திருட்டு வழியி லிருந்து விலக்கினர். தன்வாழ்வு சிறிது என்று உணராமல் இந்த உடல் நிலையானது என்று கருதி, பல கொடுமைகளைத் துணிந்து செய்வோருக்கு அழியும் உடலின் அவலநிலையை எடுத்து அதன் நிலையாமையை விளக்கினர். நன்மை யையே கனவிலும் கருதாதவர்களிடம் நன்மை செய்தால் நன்மை விளையுமென்றும், பிறர் செய்த நன்றியை நினையாத கொடியோர்களிடம் அதனை மறவாதிருக்கும்படியும் கூறி நாடெங்கும் நல்லவர்களைத் தோற்றுவித்தார்.

புத்தர் ஞானம் அடைந்து நாற்பத்தைந்து ஆண்டுகள் ஓயாது ஒழியாது செய்த அறவுரைகளால் நாடெங்கும் அறி யாமை நீங்கி அறிவொளி பரவிநின்றது. ஆனல் இந்த நாற்பத் தைந்து ஆண்டுகளில் அவர் சலியாது உழைத்த உழைப் பால் அவர் உடல்பலம் குன்றி மிகவும் தளர்ந்திருந்தார்.

எண்பது ஆண்டுகள் வாழ்ந்த அவர், இப்போது முதுமையின் பிடியில் சிக்குண்டு மரணப் பாதையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்.

— அவர் அடிக்கடி ஆனந்தரிடம் இதுவே தம்முடைய கடைசி யாத்திரை என்று சொல்லிக்கொண்டு வந்தார்.

அன்று மல்லர்கள் மகாத்மா புத்தருக்கு ஒரு மாஞ் சோலையில் விருந்தொன்று அளித்தனர். அவ்வேளையில் அந்நகரத்துள்ள **சந்தன்** என்னும் பொற்கொல்லன் மகாத்மா புத்தர் வந்துள்ள செய்தியை அறிந்து அவரைக் கண்டு தன் இல்லத்திற்கு வந்து சிறப்பிக்க வேண்டுமென்று வேண்டி ஞன். அவரும் அவன் வேண்டுகோளை நிறைவேற்ற அவன் இல்லம் சென்ருர்.

அன்று பகலில் சந்தன் பலவகை உணவுகளைத்தயாரித்து வைத்திருந்தான். அவன், மிக்க அன்போடு காய்ந்தபன்றி *இறைச்சியையும் சமைத்து வைத்திருந்தான். மகாத்மா புத்தர் அதனையும் உண்டார். அதன் பிறகு அங்கிருந்து கிளம்பி சீடர்களுடன் வெளியே வந்தார்.

---

* புத்தர்பிரான் பன்றி இறைச்சியை தாம் சாப்பிட்டார் என்று நிச்சயமாக சொல்ல போதுமான ஆதாரமில்லை என அறிஞர் ப. ராமசுவாமி அவர்கள் போதி மாதவன் என்ற நூலில் கூறியுள்ளார்கள். பாலி மொழியிலிருந்தும் வடமொழியி லிருந் தும் மொழி பெயர்த்தவர்கள் மூலத்தின் சொற்களை மாற்றிப் பொருள் கொண்டிருக்கக் கூடுமென்றும்; உலர்ந்த பன்றி இறைச்சிபோல் மென்மையான ஒரு பொருள் உண்டு என்றும், அது மக்கள் புசிக்கக்கூடிய ஒருவகைக் காளான் என்றும் 'புத்த மீமாம்சை' என்ற ஆங்கில நூலொன்றில் குறிக்கப் பெற்றுள்ள தாக அவர் கூறுகிருர்.

சந்தன் அளித்த உணவு அவர் உடல் நிலையை மிகவும் சீர்கெட வைத்துவிட்டது. அதனால் அவருக்குக் கடுமையான வயிற்றுப்போக்கு ஏற்பட்டது. அவர் அடிக்கடி அயர்ச்சியுற்று மயக்கமடைந்தார். அப்போது அவருக்கு நீர் வேட்கையுற்றது. அருகிலிருந்த ஆனந்தரைப் பார்த்து தண்ணீர் கொண்டுவரச் சொன்னார் அவர் உடனே தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தார். அதைப்பருகி நீர்வேட்கை நீங்கினார்.

பின்னர், அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு குசீ நகரத்தை அடைந்து அங்கு சற்று இளைப்பாறினார்.

பிறகு ஆனந்தரைப் பார்த்து அடர்ந்து வளர்ந்த பெரிய அரசமரம் ஒன்றினைக் காட்டி அவ்விடத்தைச் சுத்தம் செய்யச்சொன்னார். ஆனந்தரும் அவ்விதமே நீர்தெளித்து அவ்விடத்தைப் பெருக்கிச் சுத்தம் செய்து வைத்தார். மெல்ல மெல்ல அவ்விடத்தை யடைந்து வலக்கையைத் தலையணையாகக் கொண்டு ஒருபக்கமாகச் சாய்ந்து படுத்தார்.

தாம் மரணமடைந்த பிறகு தம் உடலை இன்னவாறு அடக்கம் செய்ய வேண்டுமென்பதையும், தமக்குப் பிறகு ஆனந்தரும் மற்றுமுள்ள சீடர்களும் கைக்கொண்டு ஒழுகவேண்டிய விதிமுறைகளையும், அப்போது ஆனந்தருக்குச் சொன்னார். இதையெல்லாம் கேட்கக்கேட்க ஆனந்தர் அளவிட முடியாத துயரத்தால் வாடி வருந்தினார்.

அவ்வேளையில் அருகில் இருந்த யாரோ ஒருவர் "சந்தன் அளித்த உணவாலேயே புத்தரின் உடல் நலம் கெட்டது. அவன் மகாபாபி" என்று கூறினர்.

இதனைக் கேட்ட புத்தர் மிக்க துயர் அடைந்து ஆனந்தரை அருகில் அழைத்துச் சந்தனை அழைத்துவரச் சொன்னார்.

சந்தன் வந்து சேர்ந்தான். அவன் முகம் வாடிப்போய் இருந்தது. அறியாத்தனத்தால் தவறு செய்த சிறுவன் தன் தந்தையிடம் பயந்து ஒடுங்கி நிற்பதுபோல அவன் தோற்றம் இருந்தது.

புத்தர் அவனை அருகே அழைத்தார். சுற்றி இருந்த சீடர்களை நோக்கி "பிக்குகளே! அன்பு மிகுந்த சந்தனை யாரும் பாவி என்று சொல்லாதீர்கள். அப்படி அவனைப் பாவி என்று சொல்பவர்கள் என்னையும் பாவி என்றே அழையுங்கள். சந்தன்! நீ அன்புடன் வரவேற்றுச்செய்த பணி விடைகள் என்னை முற்றிலும் மகிழ்ச்சியில் ஆழ்த்திவிட்டன. நீ அளித்த உணவாலேயே இந்தப் புத்தனுக்கு நிர்வாணம் கிடைக்கப்போகிறது. காலவெள்ளத்தில் உழன்று உழன்று உண்மையின் உயர்வைக் கண்டுபிடித்த புத்தனுக்கு நீ நல்ல ஒரு காரியத்தைச் செய்தாய். ஒரு சமயம் நான் இந்த உடலை வாட்டி வருத்திப் பலநாள் பட்டினி கிடந்தேன். அதனால் உணர்விழந்து நிலை கலங்கி இவ்வுடலை விட்டே உயிர்போய் விடும் நிலையிலிருந்தது. எனக்கு அவ்வேளையில் அமுதம் போன்ற உணவை அளித்தாள் சுஜாதை என்ற பெண்மணி. அப்போது, நான் ஞானமடையுமுன் சுஜாதையளித்த அமுதும், இப்போது நிர்வாண மடைவதற்குமுன் நீ அளித்த உணவும் எல்லாவற்றிலும் மேன்மையுடையன. அவளுக்குக் கிடைத்த புகழும் பெருமையும் உனக்கும் கிடைக்கட்டும். உனக்கு என் மனம் நிறைந்த வாழ்த்து!" என்று கூறி அங்கு கூடி இருந்த பிக்குகளைப் பார்த்து அவர்களையும் வாழ்த்தி அவனைச் சிறப்பிக்கச் செய்தார்.

அதற்குப் பிறகு அவரால் பேச முடியவில்லை, மூச்சு மேலுங்கீழும் சிரமத்துடன் ஓடி இழைந்துகொண்டிருந்தது.

இருந்தும் அவர் பிரகாசமான முகத்தில் இருந்த பொலிவு கொஞ்சங்கூட வாடவில்லை. ஆனந்தரைப் பார்த்து, 'ஆனந்தா, கவலைப்படாதே! இனிமேல் நமக்குக் குரு எவரு மில்லையே என்று சிந்தனை செய்யாதே! எனக்கு இனிப் பிறப்பு கிடையாது. நான் எல்லாவிதத் துக்கங்களையும் ஒழித்துவிட்டேன். இந்த உடல் மறைந்த பின்பு நான் கூறி யுள்ள தர்மத்தையும் ஒழுங்கையும் சரிவரக் கடைப்பிடித்து யாவரும் ஒழுகிவருக. புத்தர் இருந்தபோது நாம் அவ ருடன் நம் உள்ளத்தில் எழுந்த ஐயத்தைத் தெளிவுபடுத்திக் கொள்ள முடியாமல் இருந்துவிட்டோமே என்று பின்னல் நீங்கள் கவலைப்படவேண்டாம். உங்கள் உள்ளத்தில் உள்ள குறைகளை இப்பொழுதே கேட்டுத்தெரிந்து கொள் ளுங்கள்' என்ருர்.

அப்போது அங்கே ஐநூறுக்கு மேற்பட்டபிக்குகள் கூடி இருந்தனர். அவர்கள் யாவரும் பிறவிப் பெருங்கடலைக் கடப்பதற்கு ஒழுங்கான வாழ்வுமுறையுடன் புத்தர் பிரா னின் தர்ம நெறியில் தீவிரமான நம்பிக்கையுடன் இருந்தவர் களாதலால், அவர்கள் உள்ளத்தில் எவ்வித ஐயப்பாடும் எழவில்லை. யாவரும் மௌனமாக நின்றனர். எங்கும் சாந்தி நிலவி இருந்தது. சீடர்கள் யாவரும் மௌனமாய் இருப்பதைக் கண்டு புத்தர் "இங்கு குழுமியுள்ள நீங்கள் எனக்குப் பிறகு சங்கத்தை நல்லமுறையில் நடத்தித் தர்மத்தை நாடெங்கும் நிலவச்செய்யவேண்டும். இனி நான் இல்லையே என்ற வருத்தம் உங்களுக்கு வேண்டாம். நான் பிறந்த மகத நாட்டு லும்பினியும், போதி அடைந்த கயாவும், தர்மத்தை நாடெங்கும் பரபப முதல் இடமாக இருந்த சாரநாத்தும், இப்போது நான் உங்களைவிட்டுப் பிரியப் போகும் இந்த குசிநகரமும் உங்களுக்கெல்லாம் என்னை எந்நாளும் நினைவுபடுத்திக் கொண்டே இருக்கும்" என்ருர்.

அவருக்கு மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியது. ஒருபக்க மாகச் சாய்ந்தே படுத்திருந்தார். கடைசியாக ஒரு முறை யாவரையும் அருளொழுகும் விழியுடன் நோக்கி, “இந்த உலகில் உள்ள ஒவ்வொரு பொருளும் சேர்க்கையாகவே சேர்ந்துள்ளதால் அவைகள் பிரிந்து இதை வுறுவது திண்ணம். அதனால், உங்களுடைய விடுதலைக்காக இடைவிடாமல் கருத்தோடு உங்கள் காரியத்தில் கவனமாய் இருங்கள். உங்கள் குறிக்கோளை வெற்றியுடன் நிறை வேற்றுவதில் கண்ணுங்கருத்துமாய் இருங்கள். நீங்களே உங்களுக்கு ஒளியாகவேண்டும்! நீங்கள் யாரிடமும் அடைக்கல மாகாதீர்கள்! நீங்களே உங்களுக்கு அடைக் கலமாய் இருங்கள்! சத்தியமே வெற்றிதரும்! சத்தியத் தையே ஒளியாக உறுதியுடன் பற்றிக்கொள்ளுங்கள்!”

அதற்குமேல் அவரால் பேசமுடியவில்லை. அவர் கண் இமைகள் தாழ்ந்தன. மெல்ல மெல்ல மூச்சும் அடங்கி ஒடுங்கியது. மகாத்மா புத்தர் இவ்வாறு மகா நிர்வாண மடைந்தார்.

# 2500 ஆண்டுகளில்

"பூரணஞானம் பொலிந்த நன்ளுடு
புத்தர்பிரான் அருள் பொங்கிய நாடு"

என்று நாம் பெருமையோடு பேசிக்கொள்ளும்படி யான ஒரு சூழ்நிலையை நமக்கு உண்டாக்கித் தந்த ஓவி யர்கள், சிற்பக்கலைஞர்கள் ஆகிய இவர்களுக்கு நம் வணக்கத்தை முதலில் தெரிவித்துக்கொள்வோம்.

ஏனெனில் காலவெள்ளத்தால் அழிந்து மறைந்து போகாமல், வண்ண ஓவியமாகவும், சிறந்த சிற்பங்களாகவும் நாம் கண்ணுல் இன்றும் கண்டு களித்து மகிழ்வதற்கு ஏற்ற வகையில் அருமையான கலைச்செல்வங்களை நமக்கு அவர் களே உண்டாக்கித் தந்திருக்கிருர்கள். உலகம் உள்ளள வும் நமது நாகரிகம், கலை, பண்பாடு இவைகளை நன்கு எடுத்துப் பறைசாற்ற இவைகள் ஒரு சிறந்த சாதனமாக விளங்குகின்றனவல்லவா ?

நம்முடைய இந்திய சரித்திரத்தின் பண்டைய காலத்தை நாம் உற்று நோக்கும்போது அதனுடைய கால நிர்ணயம் நம் கண்ணுக்கு ஒழுங்காகப் புலப்படுவதில்லை. அதற்கு மாருக கப் புராணங்களும், தர்ம சாஸ்த்திரங்களும், வேதாந்த கிரந்

தங்களுமே நம்மிடம் காட்சியளிக்கின்றன. இவற்றை வைத்துக்கொண்டு நாம் இந்திய சரித்திரத்தின் வாயிலில் நுழையும் போது நம் நாட்டைப்பற்றி அந்நியர்கள் எழுதிவைத்துள்ள குறிப்புகளைக் கொண்டே கால நிர்ணயத்தை ஓரளவு குறிக்க வேண்டியதாக இருக்கிறது. அலேக்சாந்தர் படை எடுப்பிற்குப் பின் வந்த யவனத் தூதர்களும், யவன யாத்திரிகர்களும், பாஹியான் யுவான் சுவாங் போன்ற சீன நாட்டு யாத்திரிகர்களும் தாங்கள் இந்நாட்டில் கண்டதையும் கேட்டதையும் எழுதிவைத்திருக்கிறார்கள். இவர்கள் எழுதி வைத்த குறிப்புக்கள் அக்கால நிலையின் சிறப்பை உணர இடமளிக்கின்றன.

இவைகளை மட்டுமே நாம் ஆதாரமாகக்கொண்டு நம் இந்திய சரித்திரத்தின் உயரிய சிறப்பை வெளியிட்டு எழுத இடமில்லாமல் இருந்த நேரத்தில் தொல்பொருளியல் நிபுணர்களின் அரிய முயற்சியால் 1921-ஆம் ஆண்டில் வெட்டி வெளியாக்கப்பட்ட மொகஞ்சதாரோவும் ஹாரப்பாவும் கலையிலும் அறிவிலும் புகழ் வாய்ந்த உயர்ந்த நாகரிகத்தை நமக்கு விளக்கிக் காட்டின. இவை வேத காலத்துக்கு முற்பட்ட காலத்தவையாகும்.

பண்டைக் காலத்தின் சின்னமாக இந்நாடு முழுதும் பரந்துகிடக்கும் இடிந்த கோயில்கள், சரிந்த மாளிகைகள், பாழான நகரங்கள், இன்றும் சிதையாது நம்மைப் பார்த்துச் சிரிக்கும் எழில் சிற்றங்கள், அழகிய ஓவியங்கள், புதையல் போல் நமக்கு அகப்படும் பற்பல நாணயங்கள், செப்புப் பட்டயங்கள் கல்வெட்டுக்கள், ஸ்தம்பங்கள் முதலியவை பண்டைய இந்திய நாகரிகத்தின் பெருமையை உலக முழுதும் அறிவிக்கச் சிறந்த சாதனங்களாக நமக்குக் கிடைத்திருக்கின்றன.

சிந்து வெளியிலுள்ள ஹாரப்பா–மொகஞ்சதாரோ நாகரிகம் நாம் கண்டவற்றுள் மிகப் பழமையானவை. மொகஞ்சதாரோ மக்கள் சிறந்த நகர அமைப்பு முறையை ஒழுங்காக கையாண்டு அணியணியாகப் பலவகைக் கட்டிடங்களைக் கட்டி வாழ்ந்தனர். கட்டிடங்களின் நடுவில் அகன்ற முற்றத்தை அமைத்தனர். கட்டட அறைகளில் காற்றும் வெளிச்சமும் வருமாறு சாளரம் அமைத்தனர். பெண்கள் இருக்கத் தனி அறைகளும், நீராடத் தனி அறைகளும், சமையல்செய்யத் தனி அறைகளும் அமைத்துக் கொண்டனர். இதிலிருந்து அக்காலமக்கள் சிறந்த நல் வாழ்வு முறைக்கு ஏற்றவாறு இல்லங்களை அமைத்து வாழ்ந்து வந்தது அவர்களின் சமூக முன்னேற்றத்தின் சிறப்பை நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

இப்படி தொல்பொருளியல் நிபுணர்களின் அறிய முயற்சியால் நமக்குக் கிடைத்துள்ள ஆதாரங்கள் நாம் நமது பண்டைய சரித்திரத்தின் ஆரம்பகாலத்தை உணர இடமளிக்கின்றன.

அடுத்தபடியாக மாவீரன் அசோகனுடைய கல்வெட்டுகளிலிருந்தும் அவன் காலகீர்த்தியையும் மேன்மையையும் அறியமுடிகிறது. அசோகன் மாண்டு மடிந்து ஆயிரம் ஆண்டுகள்வரை அவன் பெயரே தெரியாமலிருந்தது. அவன் நாட்டிய ஸ்தம்பங்கள் முன் காலத்திலிருந்த அரக்கர்களின் வேலையென்று நம் மக்கள் நம்பி வந்தனர். இன்றுகூட நம் தமிழகத்தில் உள்ள திருக்கோவில்களில் காணும் ஆயிரக் கால்மண்டபத்தை பூதம் கட்டியதாக எத்தனையோ பேர் பேசிக்கொள்வதை உண்மை என்று எண்ணி வாழ்வோரும் உளர்.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் இந்தியாவின் நாகரிகத்தைப்பற்றிய ஆராய்ச்சி தொடங்கிற்று. அசோக

னுடைய ஸ்தம்பங்களிலும் பாறைகளிலும் எழுதப்பட்டிருந்த மொழி என்ன என்று அறிய முடியாமையால் அதன் பொருளைக் கண்டறிய முடியவில்லை. பிறகு பழைய நாணயங்களின் உதவிகொண்டு அம்மொழியின் பொருளை அறிந்தார்கள். அதிலிருந்து பண்டைய சரித்திரத்துக்குப் பல ஆதாரங்கள் கிடைத்தன. அப்பொழுதுதான் பௌத்தர்களின் மொழியாகிய பாலிக்கும் அசோக சாசனங்களின் மொழிக்குமுள்ள நெருங்கிய தொடர்பு வெளிப்பட்டது.

மகாத்மா புத்தர் வாழ்ந்திருந்த நாள்வரை அவருடைய அருமையும் பெருமையும் சங்கத்தின் தூய்மையான கோட்பாடுகளும் ஒழுங்காகப் பாதுகாக்கப்பட்டு நாடெங்கும் நல்லமுறையில் பரப்பப்பட்டு வந்தன. இந்த ஒற்றுமை உணர்ச்சி காலப்போக்கில் அழிந்து சிதைய ஆரம்பித்தது. ஒன்றாக இருந்த சங்கங்கள் பலபிரிவுகளாக மாறின.

புத்தர் இறந்தவுடன் ராஜகிருகத்தில் முதலாவதாக பௌத்த சங்க மகாசபை கூடிற்று. அதில் புத்தர்பிரான் சரமாரியாகப் பொழிந்த தர்மோபதேசங்களையும் நுட்ப வாதங்களையும், அரிய இனிய உரையாடல்களையும் உலகம் ஒருபோதும் இழந்துவிடா வண்ணம் காப்பாற்ற வேண்டுமென்று சபை தீர்மானித்தது. அதற்காக புத்தருடன் நெருங்கிப் பழகிய பிட்சுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் புத்தரின் அருள் வாக்கை அப்படியே மனப்பாடம் செய்து அதை நாடெங்கும் வாய்மொழியாகவே பரப்பி வந்தனர். புத்தர் இறந்த நூறு ஆண்டுகளிலேயே சங்கத்தில் பிளவும் கொள்கை வேறுபாடுகளும் தலைகாட்ட ஆரம்பித்தன. அதனால் வைசாலியில் இரண்டாவது பௌத்த சங்க மகாசபை கூடிற்று. அதில் கருத்து வேற்றுமை கொண்டு பல பிட்சுக்கள் தங்களுக்குள் சச்சரவை உண்டாக்கி ஒழுங்காக நடந்துவந்த சங்கத்தின் அலுவல்களைச் சரிவர நடக்க

வொட்டாமல் செய்தனர். இப்படிப்பட்ட ஒரு குழப்பமான சூழ் நிலையில்தான் அசோகன் அரியணை ஏறினான். இந்த விவரங்களை நாம் சாரநாத் சாசனத்திலிருந்து அறிந்து கொள்ளமுடிகிறது.

அசோகன் மூன்றுவது பௌத்த சங்க மகாசபையைப் பாடலிபுரத்தில் கூட்டினான். அதற்கு இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் பிட்சுக்கள் வரவழைக்கப்பட்டனர். இதில் முக்கியமாகக்குறிப்பிடவேண்டியவை த்ரிபிடகம் என்ற பெயருடைய மூன்று பௌத்த நூல் தொகுதி வரிசைப் படுத்தப்பட்டது. சங்கத்தின் தீர்மானங்களை உறுதிசெய்ய அரசனுடைய செல்வாக்கு பக்கபலமாய் இருந்ததால், பிட்சுகளால் முன்புபோல் கருத்து வேற்றுமைகொண்டு சங்கத்தில் குழப்பத்தை உண்டாக்க முடியவில்லை. சங்கத்தில் உள்ள அனைவரும் மூன்று பௌத்த நூல் தொகுதிகளையும் ஒழுங்காக மனப்பாடம் செய்தனர். இதை நாடெங்கும் பரப்புவதற்காகச் சங்கத்தில் சிறந்த பிரச்சாரகர்களை ஏற்படுத்தினர். இந்த விவரத்தைச் சாஞ்சி ஸ்தம்பத்திலும் பிரயாகை ஸ்தம்பத்திலும் நாம் கண்டறிய முடிகிறது.

பௌத்த சங்கங்கள் அளவில் பெருகி வளர்ந்து தேசமெங்கும் பரவியதற்குக் காரணமானவர் அசோகரே. அதனால்தான் நாம் அவருடைய காலத்தின் சரித்திரத்தைத் தெளிவாக உணர வேண்டி யிருக்கிறது. மூன்றே மூன்று ஆண்டுகளில் யாவரும் கண்டு அதிசயிக்கும்படியான எண்பத்து நாலாயிரம் ஸ்தாபனங்களை அசோகன் கட்டுவித்ததாக பாஹியான் என்ற சீன யாத்திரிகர் கூறுகிறர். அசோகனால் கட்டப்பட்டவை ஸ்தூபங்கள் மட்டுமல்ல. காஷ்மீரத்தின் தலைநகராகிய ஸ்ரீ நகரும் நேபாளத்தின் தலை நகராகிய லலித பட்டணமும் அசோகனால் ஸ்தாபிக்கப்பட்டவையே. இவனுடைய காலத்தில்தான் நாலந்தாவின் புகழ் பல இடங்களிலும் பரவிற்று. இலங்கை, சீன முதலிய வெளிநாடு

களிலிருந்தும் மாணவர்கள் வந்து நாலந்தா பல்கலைக்கழகத்தில் பயின்றனர். தர்க்கம், இலக்கணம், நாடகம், நடனம், தேரோட்டம், மருத்துவம் போன்ற கலைகளைக் கற்றனர். நாலந்தாவின் புகழ் எங்கும் பரவியது. புத்த மதத்தைப் பற்றிய பல விவரங்களையும் பிற பொது அறிவுகளையும் விரிவாகப் பெற்றுத் தெளிவுபெற பல பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் நாலந்தாவைத் தேடி வந்தார்கள். சில அரச குமாரர்கள்கூட அங்கே கல்வி பயின்றூர்கள். யுவான் சுவாங்கிற்குப் பிறகு சீனுவிலிருந்தும் கொரியாவிலிருந்தும் பதினெரு யாத்திரிகர்கள் நாலந்தாவுக்கு வந்தனர். யுவான் சுவாங் பனிரெண்டு ஆண்டுகள் மாணவராக இருந்து தர்க்க சாஸ்திரத்தையும் பல பௌத்த நூல்களையும் பயின்றூர். நாலந்தா பல்கலைக் கழகத்தில் உடல்நலமும் பிற தகுதிகளும் உடையவர்களே சேர்க்கப்பட்டனர். சேர வருகின்றவர்களில் பத்துக்கு இருவரே இடம் பெற்றனர். ஒரு சமயத்தில் நாலந்தாவில் எண்ணுயிரத்து ஐநூறு மாணவர்களும் ஆயிரத்து ஐநூறு ஆசியர்களும் இருந்தனர். கல்லூரியிலேயே இருந்து கல்விகற்கும் வழக்கம் ஐரோப்பாவில் இல்லாத காலத்திலேயே இந்தியாவில் இத்தகைய பெருங்கல்வி நிலையங்கள் இருந்தன.

அந்தக் காலத்தில் புகழும் சிறப்பும் மிக்க பல அறிஞர்கள் இந்தப் பல்கலைக் கழகத்தில் ஆசிரியர்களாகப் பணியாற்றியுள்ளனர். காஞ்சிபுரத்தைச் சேர்ந்த தினகரர் என்ற அறிஞர் இங்கே ஆசிரியராக இருந்தார். இவர் தர்க்க சாஸ்திரத்தில் நிபுணர். பல அறிஞர்கள் இவரிடம் மிகுந்த மதிப்பு வைத்திருந்தார்கள். சீனு ஜப்பான் நாட்டுப் புத்தகங்களில் கூட இவர் பெயரைக் காணலாம் என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

இவ்வளவு புகழ்பெற்ற நாலந்தா பல்கலைக்கழகத்தைப் பற்றி, முதன் முதலாக, லண்டன் ராயல் ஏஷியாடிக்

சொஸைட்டி யிடமிருந்து உதவிபெற்று, இந்தியத் தொல் பொருளியல் நிபுணர்கள், 1915–16 ஆம் ஆண்டுகளில், நாலந்தாவுக்கு அருகே சில இடங்களை வெட்டி ஆராய்ச்சி செய்தார்கள். இங்கே உள்ள பழைய கட்டிடங்களை அழியாமல் பாதுகாத்துப் பல புராதனச் சின்னங்களையும் சேகரித்து வைத்துள்ளார்கள். அங்குள்ள சிற்பங்களிலொன்று புத்தரை இவ்வுலகுக்கீந்த மாயாதேவியாரின் பதினோராவது நூற்றுண்டுச் சிற்பம். அச்சிற்பத்தின் பேரழகை என்னென்று சொல்வது! அசோக மர நிழலில் குழந்தை சித்தார்த்தனும் மாயா தேவியும் அழகுறக் காட்சியளிக்கின்றனர். அரசிளங் குமரியின் அழகிய அங்கங்களுக்கேற்ற ஆடை ஆபரணங்கள், தாய்மைப் பேற்றையடைந்த அப்பெண்ணரசியின் முகத்தில் பொங்கும் பெருமிதத்தின் பேரழகின் கவர்ச்சி ஆகிய இத்தனையும் அச்சிற்பியால் கல்லிலே தேக்கி நிறுத்தி வைக்கப் பட்டுள்ளன.

இவர்களுடைய இந்த அரிய முயற்சியால் தான் நாலந்தாவின் பெருமையை உலகம் அறிய முடிந்தது. இதைப் போன்ற மற்றொரு பல்கலைக் கழகம் விக்ரமசீலம் என்ற இடத்தில் இருந்தது.

அசோகன் காலத்தில் கட்டப்பட்ட சாஞ்சி ஸ்தூபிகள் உலகப் புகழ்பெற்றவை. ஸ்தூபம் என்பது பௌத்த சமய நிகழ்ச்சியை அல்லது புனித இடத்தைச் சிறப்பிக்கும் நினைவுச் சின்னங்களாகவும், பௌத்த சமயப் பெரியார்களின் சமாதிகளாகவும் கட்டப் பெற்றுள்ளவையாகும். ஸ்தூபத்தின் அமைப்பு ஒரு பெருங்கோளத்தின் பாதியை உயர்ந்த பீடத்தின் மேல் கவிழ்த்தது போலிருக்கும். சாஞ்சியில் உள்ள ஸ்தூபியின் விட்டம் 106 அடி. உயரம் 42 அடி. இந்த ஸ்தூபத்தின் உட்பாகம் செங்கல்லால் மண் சாந்துடன் கட்டப்பெற்றது. இக்கட்டிடத்தின் மிக அழகான வேலைப்

பாடு நான்கு திசைகளையும் நோக்கி நிற்கும் அழகிய நுழை வாயில்களால் வெளிப்படும். இவை முப்பத்து நான்கு அடி உயர்ந்து மிகக் கம்பீரமான தோற்றத்துடன் விளங்கு கின்றன. இவ்வாயிலின் மேல்பாகத்தில் சிற்பியின் கைத் திறனைக் காட்டும் அழகிய வேலைப்பாடமைந்த தோரண வாயில்கள் உள்ளன. அவைகளைக் கண்டு நாம் அதிசயிக்க வேண்டி இருக்கிறது. அதில் ஏராளமான சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. தச்சன் மரக்கட்டையில் அழகிய பூ வேலைகளைச் செய்வதுபோல் இங்குள்ள கற்சிற்பங்களில் அந்த அழகின் நுணுக்கமான வேலைத்திறனைச் சிற்பி செய் திருப்பதை நாம் காணலாம். அச்சிற்பங்கள் சித்தார்த்தரின் இளம்பிராயத்து வாழ்க்கையையும் ஜாதகக் கதைகளையும் சித்தரிக்கின்றன.

வங்காள ஸ்தூபிகளில் புகழ் பெற்றது காசியை அடுத் துள்ள சாரநாத்திலுள்ள பெரிய ஸ்தூபியாகும். 1794 ஆம் ஆண்டு காசி மன்னனின் திவானுன ஜகத்சிங் என்பவன் ஒரு கடைவீதி அமைப்பதற்காக சாரநாத்திலிருந்த மற்றொரு பெரிய ஸ்தூபம் ஒன்றை இடித்து அதைக் கட்டடவேலைக்கு உபயோகித்துக் கொண்டான். 110 அடி குறுக்களவும் முழுதும் செங்கல்லாலானதுமான இந்த ஸ்தூபத்தின் உள் ளிருந்து இரண்டு அபூர்வ வஸ்துக்கள் கிடைத்தன. ஒன்றுக் குள் ஒன்ருக ஒரு சிவப்புக் கற்பெட்டியும், சலவைக் கல் பேழையும் காணப்பட்டன. சலவைக்கல் பேழையினுள் முத்துக்கள், தங்கத்தாலான இலை, மனித எலும்புத்துண்டு புத்தர் சிலை முதலியன காணப்பட்டன. இந்த எலும்பு புத்தர்பிரானுடையதாகவே இருக்கலாமெனக் கருதப்படு கிறது.

சாரநாத்தில் உள்ள அசோகச் சிங்கங்கள் மிகப் பெயர் பெற்றவை. அசோகரின் அறநெறி ஆணைக் கல்வெட்டுக்

களைத்தாங்கிய இந்தத் தூண்களே மிகப் பழமையானவை. தூணின் உச்சியில் மொட்டவிழ்ந்த தாமரை மலரைக் கவிழ்த்து அதன்மேல் வட்டமான மேடை அமைத்தது போலிருக்கும். அதன் நாற்புறமும் நிற்கும் நான்கு சிங்கங்கள் கண்ணைக்கவருவன. வட்ட மேடையின் சுற்றுப் புறங்களில் யானையும், குதிரையும், எருதும், சிங்கமும் பொறிக்கப்பட்டுள்ளன. இவைத்தவிர அசோகனின் தர்ம சக்கரம் ஒன்றும் இதில் பொறிக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் நுண்ணிய வேலைப்பாடு வியக்கத்தக்கது. இதில் உள்ள சிங்கங்கள் உயிருடன் இருப்பதைப் போலவும் மிகவும் கம்பீரமாகவும் காட்சியளிக்கின்றன.

2200 ஆண்டுகளுக்குமுன் தர்மப் பிரசாரத்திற்காக அசோகமன்னன் நாட்டிய இந்த ஸ்தம்பமும், தர்மசக்கரமும், நாற்சிங்க வடிவும் இன்று பாரதத்தின் உலக சமாதானக் கொள்கையை உலகெங்கும் பரப்பும் சின்னங்களாகி விட்டன.

அசோகன் நாட்டிய தூண்களை டெல்லியிலும், அலகாபத்திலும், பெஷாவாருக்கு அருகில் உள்ள ஷாபஜ் கார்கியிலும், நேபாளத்தில் உள்ள தெரையிலும், மைசூரிலுள்ள சித்தாபுரத்திலும் பரமகிரியிலும் காணலாம்.

அசோகனுடைய ஸ்தம்பங்கள் பன்னிரெண்டு இப்போது நமக்குக் கிடைத்துள்ளன. அதிகமாய்க் கெடாமலும் நாம் கண்டு மகிழும்படியாகவும் உள்ள ஸ்தம்பங்கள் இரண்டு மூன்றே. அவைகளில் ஒன்று முன் சொன்ன சாரநாத்தில் உள்ள நான்கு சிங்கங்கள் உள்ள ஸ்தம்பம். லௌரியா நந்தன்கர் ஸ்தம்பம் மிக அழகுடையது. அதன் சிகரம் ஔரங்க சீப் காலத்தில் குண்டுபட்டுச் சற்று சிதைவு பட்டிருக்கின்றது; ஆயினும் ஸ்தம்பத்தின் அழகு கெடவில்லை. பக்ஹிரா ஸ்தம்பம் இதைவிடப் பெரிது. சிற்ப

வேலைப்பாட்டிலும் சிறந்தது. இதன் உயரம் நாற்பது அடி. சிகரம் மட்டும் சுமார் ஏழு அடி. மத்தியபாகம் உருக்கோ வெண்கலமோ என்று மயங்கும்படியான வழவழப்புடன் இழைக்கப்பட்டிருக்கிறது. சிகரத்தின் மேலுள்ள தட்டு வட்ட வடிவத்தின் விளிம்பில் அன்னங்கள் தம் இரையைக் கொத்தித் தின்னுவதைக் காட்டும் சிற்பம் வெகு அழகாய்ச் செதுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பெரிய ஸ்தம்பத்தை நிறுவ மலையிலிருந்து கல்லைச் செதுக்கி இவ்வளவு அழகாக வும் கம்பீரமாகவும் செய்துதந்த சிற்பிகளின் கைத்திறமை யைக்கண்டு நாம் வியப்புறுமல் இருக்க முடியாது.

உலும்பினி வனம்தான் புத்தர் பிறந்த இடம் என்பதை அறிய அசோகனின் ஸ்தம்பங்களே நமக்குப் போதிய சான்ருக அமைந்துள்ளன. அந்த ஸ்தம்பத்தில் 'புத்தர் இங்கே பிறந்தார்' என்று ஐயமற பொறிக்கப் பட்டுள்ளது.

புத்தர் நிர்வாணம் அடைந்து 2500 ஆண்டுகளுக்குப் பின்னும் இலங்கை முதல் ஜப்பான் வரையில் உள்ள அகன்ற நிலப்பரப்பில் சாந்தி தவழும் புத்தரின் புன்னகை முகம் மக்களின் மனதில் அன்பு நெறியையும் அறநெறிப் பாதையும் பதித்திருக்கிறதென்ருல், அதற்குக் காரணமாக அமைந்தது பேரரசன் அசோகனின் கற்பனைசக்தி நிறைந்த சிறந்த அறிவுதான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்த மதிப்புமிக்க அரசனின் ஆட்சிக்குப்பின் பௌத் தம் அதிவேகமாகவே பரவியது. ஆனல் அதில் பல பிரிவுகள் ஏற்பட்டன. இப்பிரிவுகள் காலப்போக்கில் மறைந்து பின் இரண்டு முக்கிய பிரிவுகளாக உருவெடுத் தன. இலங்கையிலும் தென் இந்தியாவிலும் ஹினயானப் பிரிவு ஓங்கிவளர்ந்தது. அது புத்தரை ஓர் ஆசிரியராக

வழிபடுகிறதே தவிர அவரைக் கடவுளாகக் கருதவில்லை. மகாயானப்பிரிவு பொதுமக்களைக் கவரக்கூடிய வகையில் அமைந்தது. சாதாரண மனிதர்களின் மனப்போக்குக்கும் குஷானர், தார்த்தாரிகள், மங்கோலியர்கள் முதலியோர் தேவைக்கும் ஏற்றபடி அது உருவாயிற்று. அதில், புத்தர் கடவுளாகக் கருதப்பட்டார். சீன ஜப்பான், திபெத், மங்கோலியா ஆகிய நாடுகள் இந்தப்பிரிவைத் தழுவிக் கொண்டன.

பௌத்தத்தின் வரலாற்றில் கனிஷ்கர் ஆட்சிக்காலம் மிக முக்கியமானது. புத்தமதத்தை அவர் ஆதரித்து வளர்த்தவர்களில் ஒருவர். அவர் காலத்தில் அவருடன் பௌத்த ஆசிரியர்கள் பலர் இருந்ததாகச் சரித்திரம் கூறுகிறது. அவர் காலத்தில்தான் மகாயான பௌத்தம் உலகின் பெரும் பாகங்களுக்குப் பரவியது.

கிறிஸ்து பிறப்பதற்கு முன்னும்பின்னும் உள்ள மூன்று நூற்றுண்டுகளில் இந்தியாவில் பௌத்தம் வெகு வேகமாய் பரவியது. வடமேற்கில் கிரேக்க ரோம கலாச்சாரத் தொடர்பால் ஒருவிதக் கலப்பான கலாச்சாரம் உண்டாயிற்று. அதைத்தான் காந்தாரக்கலை என்று கூறுகிறோம்.

குப்தர் ஆட்சிக்காலத்தைப் பௌத்தத்தின் பொற்காலமென்று கூறவேண்டும். அக்காலத்தில் இந்தியாவுக்கு வந்த சீன யாத்திரிகர், அப்போது பௌத்தம் செழிப்புற்ற நிலையில் இருந்ததாகக் கூறியுள்ளார். மதுரா, சாரநாத், அஜந்தா, பீகார் ஆகிய இடங்களில் உள்ள பௌத்த கலைச்சின்னங்களின் உயர்வையும் அதன் சிறப்பையும் நாம் இப்போதுங் கண்டு அறியமுடிகிறது. புத்தரின் திருமுகத்தில் நிலவும் ஒளியும் கருணை விழிகளும் பார்ப்பவரின் மனத்தில் அன்பு உணர்ச்சியைத் தூண்டிவிடும் தன்மையனவாய் அமைந்துள்ளன.

இந்த அழியாத அமரச்சிலைகளின் அழைகைக் கண்டு வியப் புறுதார் இல்லை.

இந்தியாவில் உள்ள பௌத்தக் குகைக்கோயில்களில் பெரும்பாலானவை மகாராஷ்ட்டிரத்தில்தான் இருக்கின் றன. இவற்றில் பாஜா, கொண்டனே, பித்தல் கோரா, பேத்ஸா, நாசிக், கார்லா, கானேரி, எல்லோரா, அஜந்தா ஆகியவை முக்கியமான குகைகள். எல்லோராவில் பல நூற்றுண்டுகளின் சிற்ப, சித்திர வேலைத்திறன்களின் உயர்வைக்காண முடிகிறது.

அஜந்தா குகைகள் காட்டின் மத்தியில் பெரிய மலை களுக்கிடையில் இருக்கின்றன. அந்தக் குகைகளின் எண்ணிக்கை முப்பத்திரண்டு. இந்தியக் கலைச்சரித்திரத் தில் நம் கலையார்வத்தின் உயர்வை இங்குள்ள சித்திரங்கள் நன்கு எடுத்துக் காட்டுகின்றன. பௌத்தமதத்தின் வளர்ச்சி அழகான ஓவியங்களால் எழுதப்பட்டிருக்கின்றது. எகிப்திய மன்னர்களின் சமாதிக்குகைகளில் காணப்படும் ஓவியங் களின் அழகிற்கும் உயர்விற்கும் இவை எந்த வகையிலும் தாழ்ந்தவையல்ல. இக்குகைகளில் பலவகைப்பட்ட சித்தி ரங்கள் உள்ளன. வரலாற்றுக் காட்சிகள், அலங்காரங்கள், புத்தரின் வாழ்கைச் சரித்திரத்தின் பகுதிகள், புத்தருடைய வரலாற்றில் அவரது பிறப்பு, துறவு, ஞானோதயம் முதலி யவை சிறப்புடன் சித்தரிக்கப்பட்டுள்ளன. புத்தருடைய திருஉருவைப் பலவகையான நிலைகளில் அங்கு காண லாம். இந்த அருமையான ஓவியங்கள் உயிரும் உணர்வும் கொண்டு நம்மிடம் பேசுகின்றன. அதோடுமட்டுமல்ல, அதில் உள்ள வர்ணங்கள் இன்றும் அழியாமல் அப்படியே இருப்பது மிக்க வியப்புக்குரிய செய்தியாகும்.

சோழ நாட்டின் சிறப்புமிக்க துறைமுகப் பட்டினமாக விளங்கிய காவிரிப்பூம்பட்டினத்தில் கி. பி. இரண்டாம் நூற்றுண்டில் பௌத்தக்கோவில்களும் பௌத்த விகாரைகளும் நிறைந்திருந்தன. இங்கு, அசோகச் சக்கரவர்த்தியின் திருமகனுன மகேந்திரன் இந்திர விகாரையைக் கட்டியதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

கி. பி. எட்டாம் நூற்றுண்டிலிருந்து உலோகத்தால் சிலைகள் செய்யும் வழக்கம் ஏற்பட்டது. தென்னிந்தியாவில் வெண்கலத்தில் உருவாக்கப்பட்ட புத்தர் சிலைகள் தஞ்சை ஜில்லாவில் சில இடங்களில் கண்டெடுக்கப்பட்டன. அவை கி. பி. 10–ம் நூற்றுண்டிலிருந்து 15–ம் நூற்றுண்டிற்குள் செய்யப்பட்டவை என ஊகிக்கப்படுகிறது.

முதல் ராஜராஜ சோழன் காலத்திலும், ராஜேந்திர சோழன் காலத்திலும், சுமத்திராவைச் சேர்ந்த சைலேந்திரர்களால் நாகப்பட்டினத்தில் சில புத்த விகாரங்கள் கட்டப்பட்டன. சோழர் காலத்தில் நாகப்பட்டினம் சிறந்த பௌத்த இடமாக விளங்கியது. ஸ்ரீ விஜயநாட்டு மன்னனுன மாரவிஜயோத்துங்கன், இந்தோனேசிய மன்னனுன கடகன் ஆகியோர் நாகப்பட்டினத்தில் நிர்மாணித்த சூளாமணி விகாரத்துக்கு ராஜராஜ சோழன் யானை மங்கலம் கிராமத்தை மானியமாகக் கொடுத்ததாக லீடன் நகரத்து பொருட் காட்சிசாலையில் உள்ள ஒரு செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

நாகப்பட்டினத்துக்கு வடக்கே இரண்டு கல் தொலைவில் 'புது வெளிக்கோபுரம்' என்றும், 'கறுப்புக் கோயில்' என்றும் பெயருள்ள ஒரு கோபுரம் இருந்ததென்றும் இக்கோபுரம் நாகப்பட்டினத்துக்கு வருகிற மரக்கலங்களுக்கு ஒரு அடையாளமாகக் கடலில் தோன்றியதென்றும், இதைத் தாம் 1849-ம் ஆண்டில் நேரில் கண்டதாக சர்வால்டர் எலியட் என்பவர் எழுதியுள்ளார்.

இந்தக் கோபுரம் இருந்த இடத்தில் கிறிஸ்து சபைப் பாதிரிமார்கள் இப்போது கட்டிடம் கட்டி இருக்கிறார்கள். 1867–ல் இக்கோபுரத்தை இடித்துவிட்டுக் கட்டிடம் கட்டிக் கொள்ள அப்போதுள்ள அரசாங்கம் உத்தரவளித்திருக்கிறது. இரு நூறு ஆண்டுகளுக்கு முன்னே இங்கிருந்த பெரிய இலுப்பை மரத்தை வெட்டியபோது அம்மரத்தின் அடியில் புதைக்கப்பட்டிருந்த ஐந்து புத்த விக்கிரகங்கள் கண்டெடுக்கப்பட்டன. இதைத் தவிர நாகப்பட்டினத்தில் வேறு அநேக புத்த விக்கிரகங்கள் செம்பினால் செய்யப்பட்டவை கிடைத்தன. அவை இப்போது சென்னை நகரத்துப் பொருட்காட்சி சாலையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் இருந்த திருமங்கையாழ்வார் என்ற வைணவசமயப் பெரியார் நாகப்பட்டினத்தில் பௌத்த விகாரத்திலிருந்த தங்கத்தினால்செய்யப்பட்ட புத்த விக்கிரகத்தை எடுத்துக்கொண்டுபோய், அந்தப் பொன்னைக்கொண்டு திருவரங்கக்கோயிலில் திருப்பணிகள் செய்தார் என்று குரு பரம்பரைப் பிரபாவம் என்னும் நூல் கூறுகிறது.

கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டில் பர்மா தேசத்தை அரசாண்ட ராமபதி அரசன் என்பவன் பதினொரு பௌத்த பிட்சுக்களையும், சித்திரத்தூதன் என்னும் தூதனையும் இலங்கைக்கு அனுப்பினான். அவர்கள் இலங்கையிலிருந்து பர்மாவுக்குத் திரும்பும்போது கடலில் பெரும்புயல் அடித்து அவர்களின் கப்பலை உடைத்துச் சிதைத்துவிட்டது. நல்ல காலமாக அவர்கள் உயிர்தப்பிக் கரையேறினார்கள். இது கி. பி. 1477–ல் நடந்தது. இந்தச் செய்திகளைப் பர்மா தேசத்தில் உள்ள கலியாணி நகரத்துக் கல்வெட்டுச் சாசனம் கூறுகிறது.

மன்னார்குடி தாலுக்காவில் உள்ள பூதமங்கலம் என்னும் கிராமத்தில் பௌத்தப்பள்ளி ஒன்று வேணுதாசர் என்ற பிரபுவால் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. அங்கிருந்த ஒரு புத்தரின் உருவச்சிலையை எடுத்துத் தஞ்சையில் வைத்திருக்கிறார்கள்.

காஞ்சிபுரம் சிறந்த பௌத்த அறிஞர்களைப் பெற்று வளர்த்த இடம். நாலந்தா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்த தருமபாலர் இங்கேதான் பிறந்தார். நூற்றுக்கணக்கான மடாலயங்களும், ஒரு ராஜவிகாரமும் இங்கே இருந்ததாகக் கூறப்படுகிறது.

கும்பகோணத்தில் நாகேஸ்வரஸ்வாமி திருமஞ்சன வீதியில் ஒரு பிள்ளையார் கோவிலில் பகவரிஷி என்னும் பெயருள்ள ஒரு புத்தர் உருவம் இருக்கிறது.

மற்றும் பட்டீச்வரம், மங்க நல்லூர் அருகே உள்ள பெருஞ்சேரி, அம்பகரத்தூர் அருகே உள்ள கோட்டப்பாடி, புதுக்கோட்டையில் உள்ள வெள்ளனூர், திரு நெல்லிக் காவல் பக்கத்தே உள்ள புதூர் முதலிய இடங்களில் புத்தர் உருவச்சிலைகள் உள்ளன.

சென்னைப் பட்டினத்திற்கு மேற்கே நாற்பது மைல் தூரத்தில் உள்ள கூவம் என்ற இடம் பௌத்தக் கிராமமாக இருந்திருக்கிறது. இங்கிருந்த ஒருபெரிய புத்தர் உருவச்சிலையைச் சென்னை அரசாங்கத்துப் பொருட்காட்சிசாலையில் கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள்.

இதைத் தவிரப் புத்த மங்கலம், போதி மங்கலம், சங்க மங்கலம், மாயவரம், உறையூர், எலயனூர், புத்த மங்கை முதலிய இடங்களிலும் பௌத்தர்களும் பௌத்தப் பள்ளிகளும் இருந்ததாகத் தெரிய வருகிறது,

கர்னாடகத்திலும் ஆந்திராவிலும் அசோகர்காலம் முதலே பௌத்தம் வேரூன்றிப் பரவியது. கிருஷ்ணா-கோதாவரி நதிகளுக்கு இடைப்பட்ட இடங்களில் உள்ள அமராவதி, நாகர்ஜுனகொண்டா, குடிவாடா, பட்டிப்ரோலு, ஜக்கய்ய பேட்டா, குடிவாடா, கண்டசாலா முதலான இடங்களில் பல ஸ்தூபங்கள் கட்டப்பட்டன. அவைகளில் அமராவதிதான் மிக முக்கியம். அங்குள்ள ஸ்தூபந்தான் மிகப் பெரியது. மிக அழகுடையது. காந்தார சிற்பக்கலைகளைப் போலவே அமராவதி சிற்பக்கலையும் அழியாப் புகழ் பெற்றது.

விஜயபுரி என்ற பெயருடன் சர்வதேசப் புகழ்வாய்ந்த பௌத்த கேந்திரமாக விளங்கியது நாகார்ஜுனகொண்டா. இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்குமுன் கண்டு பிடிக்கப்பட்ட இந்த ஸ்தூபத்தில் புத்தரின் அஸ்திகள் வைத்துப் பூஜிக்கப் பட்டன. அங்கு புத்தரின் பாத கமலங்களை நினைவூட்டும் சிற்பம் ஒன்று தோண்டி எடுக்கப்பட்டுள்ளது.

சௌராஷ்டிரத்திலும் பல பௌத்தக் குகைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. ஜுனகாட், தாங், சித்தாஸர் கலாஜா ஸாணு, வல்லபி, காம்பில்லியா ஆகிய இடங்களில் பிரபல பௌத்த ஸ்தலங்கள் இருந்திருக்கின்றன. அங்கே கல் வெட்டுகளும் ஸ்தூபங்களின் சின்னங்களும் இடிந்து சரிந்து விழுந்துகிடக்கின்றன. இப்படி இந்தியாவில் கால் ஊன்றிய பௌத்தம் ஆசியாவின் பல பகுதிகளிலும் மக்களின் பேரபிமானத்தைப் பெரிதும் பெற்று விளங்குகிறது. இலங்கை, பர்மா, சயாம், கம்போடியா, சீனா, கொரியா, ஜப்பான் முதலிய இடங்களிலும் பரந்து விரிந்து தழைத்திருக்கின்றது.

இப்போது, புத்தர் பிரானின் 2500 ஆண்டு நினைவு நாளை விடுதலையடைந்த பாரதம் வெகு சிறப்பாகக் கொண்டாடியது.

விஞ்ஞான வளர்ச்சியின் வேகத்தை நம்மால் கணக்கிட்டுச்சொல்ல முடியவில்லை. அணுவின்சக்தியையும் ஹைட்ரஜனின் வேகத்தையும் உலகம் எப்படிப் பயன்படுத்தப் போகிறது என்றும் தெரியவில்லை. மனிதனை இந்த விஞ்ஞானிகளின் அரியசாதனை அழிவுப் பாதையிலே கொண்டு அழுத்தி விடுமோ என்று கவலைகொள்ள வேண்டி இருக்கிறது. இப்படி ஒரு புறம் அறிவின் கூர்மை மிக அருமையாகத் தீட்டப்பட்டு உயிருக்கே—உலகத்துக்கே உலை வைக்கக்கூடிய நிலையில் இருக்கிறது. மற்றொருபுறம் அறிவு மழுங்கிய அறியாமையில் அழுந்திக்கிடக்கும் மக்களை எண்ணும்போது நெஞ்சம் வேதனை கொள்ளுகிறது. இதைத் தான் பண்டித நேரு அவர்கள் 24-5-56 அன்று புதுடில்லி ராமலீலா மைதானத்தில் நடைபெற்ற புத்தர் விழாப் பொதுக்கூட்டத்தில் பேசினார். அவர் பேச்சின் சாரம் வருமாறு:

"சந்திர கிரகணமோ, சூரியகிரகணமோ ஏற்படும் போது உண்ணுவிரதம் இருப்பதையும், ஆற்றில் கடலில் குளிப்பதையும் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். எப்போதாவது ஒரு நாள் உண்ணுவிரதம் இருப்பதும், ஆற்றில் குளிப்பதும் உடலுக்கு நல்லதுதான். ஆனால், அந்தச் செயல்களை உடல் நன்மைக்காக என்று இல்லாமல், கிரகணத்திற்காக என்று செய்கிறார்களே அந்தச் செயலைத் தான் நான் துளியும் விரும்பவில்லை. ராகு என்னும் ஓர் பாம்பு சந்திரனை விழுங்குகிறது என்றும் அப்படி விழுங்கும் போதுதான் சந்திரகிரகணம் உண்டாகிறது என்றும் நம் மக்களில் சிலர் தவறான கற்பனை ஒன்றை உருவாக்கி இருக்கிறார்கள். இந்த விசித்திரமான முட்டாள் தனத்தை ஒப்புக்கொள்ளும் அளவுக்கா நாம் மதிகெட்டவர்களாக இருக்கமுடியும்? பூமியின் நிழல் சந்திரன் மீது விழுவதால் தான் சந்திரகிரகணம் உண்டாகிறது. நாம் உண்ணுவிரதம்

இருப்பதாலோ, ஆற்றில் கடலில் குளிப்பதாலோ, ஜப மாலையை உருட்டுவதாலோ, பறையடிப்பதாலோ, அந்தக் கிரகணம் தீர்ந்து விடுவதில்லை, பூமியின் நிழல் சந்திரன் மீது விழுவது எப்போது நிற்கிறதோ அப்போதுதான் கிரகணமும் முடிகிறது. மதத்தின் பெயரால் பரப்பப்பட்டு வருகிற இப்படிப்பட்ட மூட நம்பிக்கைகளையெல்லாம்தான் மாவீரத்துடன் எதிர்த்துப் போராடினர் கௌதம புத்தர்.'' இந்தச் சொற்பொழிவு, அறியாமை நிறைந்தவர்களாகவும், சுய எண்ணங்களின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டைகளாகவும் உள்ள பிற்போக்கு சக்திகளைத் தகர்த்தெரியும் வீர உரையாகும்.

இந்த அறிவுவிளக்கத்தை 2500 ஆண்டுகளுக்கு முன்பே மக்கள் முன்னிலையில் சொன்னர் புத்தர். எந்தப் பொருளையும் அறிவுக்கண்கொண்டு அலசி ஆராய்ந்த புத்தர் பிரான் இந்த உலகில் எப்படி வாழவேண்டும் என்பதைப்பற்றித்தான் சிந்தித்தார். மனிதன் துன்பமில்லாமல் வாழும் முறையை அவருடைய வாழ்வும் வாக்கும் நமக்கு நன்கு எடுத்துக்காட்டுகின்றன.

இளைஞர் உலகம் இந்த அறிவுலக மேதையின் வழியைப் பின்பற்றி வாழவேண்டுமென்ற ஆவலில்தான் இச்சிறு நூலை எழுதினேன். அனைவரும் படித்துப் பயன் பெறவேண்டுமென்பதே என் நீங்கா ஆவல்.

6A
4-36

இமயப் பதிப்பகம்
நாகப்பட்டினம்

Wrapper Printed at The Asian Printers, Madras-5